கோவை

# தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

வித்வான் S. நாகராசன், B.O.L., B.T.,
தமிழாசிரியர்,
தூய மேரி போதனாமுறை உயர்நிலைப்பள்ளி, சேலம்.



ஸ்டாண்டர்ட் டெக்ஸ்ட்புக் கம்பெனி
ஈரோடு

1955

பதிப்புரிமை]

[விலை அணா 9

முதற் பதிப்பு—நவம்பர், 1951
ஆறும் பதிப்பு—ஜுலை, 1955

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19-5-1954,
Supplement to Part I-B, Page 23]

Kabeer Printing Works, Madras (2972)

# முகவுரை

'கோவை தமிழ் வாசகம்' என்னும் இப்பாட நூல் வரிசை, கடைசியாக 1939-ஆம் ஆண்டில் ஆரம்ப வகுப்புகட்கென்று கல்வித்துறையினர் வெளியிட்டுள்ள பாடவியலை முற்றிலும் தழுவி முறைப்படி அமைந்துள்ளது. அப் பாடவியலில் கண்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இவ்வரிசையில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மொழிப் பயிற்சி பற்றிய பொது விதிகளையும், பொருட் பயிற்சி பற்றிய சிறப்பு விதிகளையும் கருத்திற் கொண்டு அவற்றோடு சிறிதும் முரண்படா வகையில் இஃது ஆக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பில் பெற்ற வாய்மொழிப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு, வேறு பல பொருள்களைப் பற்றிப் புதுச் சொற்களை அறிந்து பயன்படுத்தி உரையாடல், சிறு சம்பவங்களைக் கோவையாகச் சொல்லல், படித்தல், மவுனமாகப் படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சி பெறுதற்கு இயன்ற முறையில் பாடங்களும், பயிற்சிகளும், படப் பயிற்சிகளும் பிறவும் இவ்வரிசையில் சிறப்பாக அமைந்துள்ளன. சிறுவர்களின் சொல்லறிவும் பேச்சுப் பயிற்சியும் உரம்பெறுதற்கு உறுதுணையாதற் பொருட்டுச் சில பாடங்கள் உரையாடல் முறையில் எழுதப்பட்டுள்ளன. சிறுவர்கள் விரும்பிப் படித்து மகிழ்ந்து பாடத்தக்க எளிய இனிய தேசீயப் பாட்டுகளும், கதைப் பாட்டுகளும், நீதிப் பாட்டுகளும், தெளிவான விளக்கப் படங்களுடன் மிகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாற்றான் இப்பாடநூல் வரிசை, தெளிவான பொருளறிவும், திருந்திய மொழிப் பயிற்சியும் பெறத் தொடங்கும் இளஞ்சிறார்க்கு உறுதுணையாக அமைந்து பெரும் பயன் விளைப்பதாக அமைந்திருத்தலின், தொடக்கநிலைக் கல்வியுலகத்தில் சிறக்க வரவேற்புக் கொள்ளும் என நம்புகின்றோம்.

ஆசிரியன்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிரார்த்தனை | ... | 1 |
| 2. | தமிழ் நாடு | ... | 3 |
| 3. | செந்தமிழ் நாடு | ... | [illegible] |
| 4. | உழைப்பின் உயர்வு | ... | 11 |
| 5. | பொதுநலப் பணியாளர் | ... | 16 |
| 6. | அறிவுள்ள பசு | ... | 23 |
| 7. | தபால் | ... | 28 |
| 8. | கார்டு | ... | 37 |
| 9. | அயலான் யார்? | ... | 40 |
| 10. | பயிர்த்தொழில்—I | ... | 46 |
| 11. | பயிர்த்தொழில்—II | ... | 50 |
| 12. | பாரதியார் | ... | 56 |
| 13. | நல்ல வார்த்தை | ... | 62 |
| 14. | கடிதம் எழுதுதல் | ... | 64 |
| 15. | குடிவீட்டின் வரலாறு | ... | 70 |
| 16. | கரிகாலன் நியாய விசாரணை | ... | 76 |
| 17. | வஞ்சகப் பூனை | ... | 82 |
| 18. | குரங்கும் குருவிகளும் | ... | 88 |
| 19. | சென்னை மாநகரம் | ... | 90 |
| 20. | பருத்திச் செடி | ... | 96 |
| 21. | நூற்றல் | ... | 100 |
| 22. | புலிக் கூடு | ... | 105 |
| 23. | நாச்சியப்பர் | ... | 107 |
| 24. | தினசரிக் கடமைகள் | ... | 112 |
| 25. | தாய் நாடு | ... | 114 |
| 26. | நறுந்தொகை | ... | 115 |

# கோவை தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்



### 1. பிரார்த்தனை

உள்ளத்தில் உள்ள பரமா—எனக்(கு)
உன் அருள் வெள்ளத்தை ஈவாய் ;
கள்ளமில் லாத மனத்தால்—உன்னைக்
காலையும் மாலையும் நினைப்பேன்.

கல்வி யறிவொளி ஈவாய் ;—செய்ய
கலையில் புலமை அளிப்பாய் ;
நல்ல ஒழுக்கம் அருள்வாய் ;—தாய்
நாட்டின் மணிப்பிள்ளை யாவேன்.

துச்ச நினைவை ஒழிப்பாய் ;—என்றும்
தூய நினைப்பை வளர்ப்பாய் ;
அச்சப் பிசாசைத் துரத்தி—வீரர்
ஆண்மையும் ஆற்றலும் தாராய்.

தாயும் தகப்பனும் நீயே ;—கல்வி
தந்துத வும்குரு நீயே ;
நோய்தவிர் வைத்தியன் நீயே ;—நான்
நூறுண்டு வாழச்செய் வாயே.

—யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்

### பயிற்சி

1. இப்பாடல்களை மனப் பாடம் செய்.
2. நாள்தோறும் காலை மாலையில் இப் பாடல்களைப் பாடிப் பிரார்த்தனை செய்.
3. பாடசாலையில் பிள்ளைகளோடு சேர்ந்து பாடு.
4. வேறு பிரார்த்தனைப் பாடல்களையும் மனப் பாடம் செய்து பாடிப் பழகு.




## 2. தமிழ் நாடு

நாம் தமிழ் மொழி பேசுகிறோம். தமிழ் மொழி நமக்குத் தாய்மொழி ஆகும். தமிழ் மொழியைத் தாய் மொழியாக உடையவர்கள் தமிழர், தமிழ் மக்கள் எனப்படுவர். தமிழ் மக்கள் பிறந்து வாழும் நாடு தமிழ் நாடு, தமிழகம் எனப்படும். தமிழ் நாடு மிகவும் பழமையானது. பழங்காலத்தில் அது மிக்க பரப்புள்ளதாக இருந்தது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அதன் பெரும்பகுதி கடலுள் மூழ்கியது. அதனால் அதன் கிழக்கு எல்லையும், தெற்கு எல்லையும் சுருங்கின. வடக்கில் திருவேங்கட மலையும், தெற்கில் குமரி முனையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் அதன் எல்லைகளாக அமைந்தன.

இப்பொழுது மலையாள மொழி வழங்கும் பகுதி முன்னர் தமிழ் நாடாகவே இருந்தது. அங்கும்

தமிழ் மொழியே வழங்கி வந்தது. நாளடைவில் அங்கு வழங்கிய தமிழ் மொழி சிதைந்து மலையாள மொழியாக மாறியது. பின்னர் அம்மொழி வழங்கும் பகுதி தனியாகப் பிரிந்து விட்டது. எனவே தமிழ் நாட்டின் மேற்கு எல்லையும் சுருங்கியது. இப்பொழுது உள்ள தமிழ் நாடு இவ்வாறு சுருங்கிய பகுதியே ஆகும். இதன் வட எல்லை திருவேங்கட மலை; தெற்கு எல்லை குமரி முனை; கிழக்கு எல்லை வங்காளக் கடல்; மேற்கு எல்லை திருவாங்கூர், கொச்சி, மலையாளப் பகுதிகள். இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட சுருங்கிய பகுதியே இன்று உள்ள தமிழ் நாடு ஆகும்.

தமிழ் நாடு முன் காலத்தில் மூன்று தனி நாடுகளாகப் பிரிந்து இருந்தது. அவை சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன. தமிழ் நாட்டின் மேற்குப் பகுதி சேர நாடாக இருந்தது. அது சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மலையாள ஜில்லாக்களும், திருவாங்கூர், கொச்சி நாடுகளும் சேர்ந்த நிலப்பகுதி ஆகும். சேரநாட்டின் தலை நகரம் வஞ்சி என்பது. முசிரி, தொண்டி என்பன சேர நாட்டின் துறைமுகப் பட்டினங்கள். தமிழ் நாட்டின் கிழக்குப் பகுதி சோழ நாடாக இருந்தது. அது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும், கிழக்குக் கரைப் பகுதிகளும் சேர்ந்தது ஆகும். புகார் நகரம் என்னும் காவிரிப்பூம் பட்டினம் சோழ நாட்டின் தலைநகரமாகவும், துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியது. உறையூர் சில காலம் சோழ நாட்டிற்குத் தலை நகரமாக இருந்தது. தமிழ் நாட்டின் தென் பகுதி பாண்டிய நாடாகும். இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்

கள் அடங்கிய பகுதியே பாண்டிய நாடாக இருந்தது. பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை ஆகும். கொற்கை என்பது பாண்டிய நாட்டின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது.

சேர சோழ பாண்டிய நாடுகளை முறையே சேரர், சோழர், பாண்டியர் என்னும் பழந்தமிழ்க் குடியினர் ஆண்டுவந்தனர். இம்மூவரும் முடி யுடைப் பேரரசர் ஆவர். இவர்கள் முடியுடை மூவேந்தர் என்று சிறப்பிக்கப் பட்டனர். இவர் களுள் சேரர் வீரம் சிறந்தவர்கள் ; சோழர் வண்மையும் நீதியும் வாய்ந்தவர்கள் ; பாண்டியர் கல்விச் சிறப்புடையவர்கள். இவர்களைத் தவிர, இவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களும் பலர் தமிழ் நாட்டில் இருந்தார்கள். அவர்கள் குறுநில மன்னர் எனப்பட்டனர். அவர்களுக்கு முடிசூடும் உரிமை இல்லை. அவர்கள் சிறு சிறு நாட்டுப் பகுதி களுக்குத் தலைவர்களாக இருந்தார்கள் ; போர்க் காலங்களில் பேரரசர்களுக்குத் துணைபுரிந்து வந்தார்கள்.

முடியுடை வேந்தர்களும் குறுநில மன்னர் களும் தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தார்கள். அவர்கள் தாங்கள் தமிழ் மொழியை விரும்பிக் கற்றுப் புலமை பெற்றார்கள் ; தமிழ் மொழிப் புலவர்களை நன்கு மதித்துப் பொன் னும் பொருளும் கொடுத்து உயர்வாகப் போற்றி னார்கள். மூவேந்தருள்ளும் தமிழ் மொழியைச் சிறப்பாகப் போற்றி வளர்த்தவர்கள் பாண்டியர் களே ஆவர். அவர்கள் தங்கள் தலைநகரமாகிய மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைத்தனர் ; அதில் தமிழ்ப் புலவர்களைக் கூட்டினர் ; பழைய

நூல்களை ஆராயவும், புது நூல்கள் இயற்றவும் செய்தனர். தமிழ் அரசர் ஆட்சியில் தமிழ்மொழி தலை சிறந்து விளங்கியது. தமிழ் நாடு கல்வி சிறந்த நாடாகக் காட்சி அளித்தது.

தமிழ் அரசர்கள் கல்வியோடு கைத்தொழிலை யும் வாணிகத்தையும் போற்றி வளர்த்தார்கள். தமிழ் நாட்டில் பலவகைத் தொழில்களும் சிறப்பாக நடந்து வந்தன. தமிழ் நாட்டில் செய்யப்பட்ட பொருள்கள் மேல் நாடுகளுக்கெல்லாம் சென்றன. உள் நாட்டு வாணிகமும், வெளி நாட்டு வாணிகமும் சிறப்பாக நடைபெற்றன. தமிழ் மக்கள் கப்பல் களின் மூலம் கடல்களைக் கடந்து வெளி நாடு களோடு வாணிகம் செய்து வந்தனர். மேல் நாட் டார் கப்பல்களில் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து, ஆடை, முத்து, வாசனைப் பொருள்கள் முதலியவற்றை வாங்கிச் சென்றனர். அதனால் பல நாடுகளின் செல்வமும் தமிழ் நாட்டில் வந்து குவிந்தது.

பழங்காலத் தமிழர்கள் கடவுள் பக்தி உடைய வர்களாக இருந்தார்கள். அவர்கள் நாடெங்கும் கோவில்களைக் கட்டினர்; அவற்றில் வழிபாடும் விழாக்களும் தடையின்றி நடந்துவர நிலையான ஏற்பாடுகளைச் செய்தனர். அதனால் தமிழ் நாட்டில் கடவுள் பக்தி வேரூன்றியது.

இவ்வாறு பழங்காலத்தில் தமிழ் நாடு கல்வியும், செல்வமும், கடவுள் பக்தியும் சிறந்த வளநாடாக இருந்தது. தமிழ் மக்கள் அறிவும், ஈகையும், நல் லொழுக்கமும் உடைய்வர்களாக இன்ப வாழ்வு வாழ்ந்தார்கள். அத்தகைய தமிழ் நாடு இன்று சீர்குலைந்து இருக்கிறது. அதனை மீண்டும் பழைய

உயர் நிலைக்கு உயர்த்த வேண்டுவது உங்கள் கடமையாகும். நீங்கள் தமிழ் மொழியை வளர்த்துக் கல்வியைப் பரப்ப வேண்டும்; கைத் தொழிலையும் வாணிகத்தையும் போற்றிச் செல்வத்தைப் பெருக்க வேண்டும். கடவுள் பக்தியை நிலை பெறச் செய்து நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| தாய்மொழி | துறைமுகம் | குறுநில மன்னர் |
| தமிழர் | பட்டினம் | மேல் நாடு |
| தமிழகம் | உரிமை | தமிழ்ச் சங்கம் |
| ஆண்டு | ஈகை | நூல்கள் |
| புலமை | பேரரசர் | ஆட்சி |
| ஏற்பாடு | மூவேந்தர் | காட்சி |
| ஜில்லா | வண்மை | வாணிகம் |
| தலைநகரம் | சிற்றரசர்கள் | வெளிநாடு |

## கேள்விகள்

1. தமிழ் நாட்டின் எல்லைகள் சுருங்கியது ஏன்?
2. இன்று உள்ள தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
3. தமிழ் நாட்டின் மூன்று பிரிவுகள் யாவை?
4. தமிழ் நாட்டு மூவேந்தர்கள் யாவர்?
5. குறுநில மன்னர் என்போர் யார்?
6. பாண்டியர்கள் தமிழை எவ்வாறு வளர்த்தனர்?
7. தமிழ் நாட்டில் செல்வம் குவிந்தது எவ்வாறு?
8. தமிழ் அரசர் கடவுள் பக்தியை எவ்வாறு பரப்பினர்?
9. தமிழ்நாடு பழைய உயர்நிலையை அடைய என்ன செய்ய வேண்டும்?

## பயிற்சி

1. எதிர்ச் சொற்கள் கூறுக:

பழமை, சுருங்கியது, சிற்றரசர், உள்நாடு, நல்லொழுக்கம்.

2. தாய்மொழி, பெரும்பகுதி, தனியாக, தலைநகரம், உயர்வாக, தலைசிறந்து, நிலையான ஏற்பாடு, சீர்குலைந்து—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. பொருள் கூறு: ஆண்டு, புலமை, வண்மை.

4. அரசர்—இச்சொல்லுக்குச் சரியான வேறு மூன்று சொற்கள் சொல்.

5. வாசனை, பக்தி—இவற்றிற்குச் சரியான வேறு சொற்கள் சொல்.

6. முதல் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்து எழுது. ஒவ்வொன்றும் ஒருமையா, பன்மையா என்பதைக் குறி.

7. தமிழ் நாட்டின் படத்தைப் பார்த்து அதன் எல்லைகளையும், பிரிவுகளையும் தெரிந்துகொள்.

8. தமிழரசர்கள் புலவர்களைப் போற்றினர். இது முடிந்த கருத்தைத் தெரிவிக்கிறது. இது ஒரு வாக்கியம். இதில் தமிழரசர்கள், புலவர்களை போற்றினர் என்னும் மூன்று சொற்கள் உள்ளன. அவற்றுள் போற்றினர் என்பதே வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கிறது. இச்சொல் செயலைக் குறிக்கிறது. இது பயனிலை எனப் படும்.

'யார் போற்றினர்?' என்று கேள்வி கேட்டால் வரும் விடை தமிழரசர்கள் என்பது. இது செயலைச் செய்த பெயரைக் குறிக்கிறது. இது எழுவாய் எனப் படும்.

'யாரைப் போற்றினர்?' என்று கேள்வி கேட்டால் புலவர்களை என்பது விடையாக வருகிறது. இது செயப்படு பொருள் எனப்படும்.

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்னும் இம் மூன்றும் வாக்கியத்தின் உறுப்புகள் ஆகும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு:

புலவர்கள் நூல்களை ஆராய்ந்தனர்.

அரசர்கள் கோவில்களைக் கட்டினர்.

பாண்டியர் சங்கத்தை அமைத்தனர்.

## 3. செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி—என
மேவிய ஆறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு.

கல்வி சிறந்த தமிழ் நாடு—உயர்
கம்பன் பிறந்த தமிழ் நாடு.
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு.

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு.

—பாரதியார்

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி :

தமிழ் நாட்டின் வட எல்லை ——

தமிழ் நாடு —— தனி நாடுகளாகப் பிரிந்திருந்தது.

சிற்றரசர்கள் —— எனப்பட்டனர்.

குறுநில மன்னர்க்கு முடி சூடும் உரிமை ——.

—— தமிழ்ச் சங்கத்தை அமைத்தனர்.

2. இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து வாசி:

அரசர்கள் தமிழைக் கற்றுப் புலமை பெற்றார்கள்.

மேல் நாட்டார் பொன்னைக் கொடுத்துப் பொருளை வாங்கினர்.

3. ஒரு வாக்கியமாகச் சேர்த்து வாசி :

அரசர்கள் கோவில்களைக் கட்டினர். அரசர்கள் விழாக்கள் நடத்தினர்.

4. புலவர் நூல்களை ஆராய்ந்தனர்—இவ்வாக்கியத்தில் 'புலவர்' என்பது எழுவாய். அது பெயர்ச்சொல். எழுவாய் எப்பொழுதும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும். 'ஆராய்ந்தனர்' என்பது பயனிலை. அது வினைச்சொல். பெரும்பாலும் வினைச்சொல்லே பயனிலையாக வரும். 'நூல்களை' என்பது செயப்படுபொருள். அது பெயர்ச்சொல். செயப்படுபொருளும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும்.

5. புலவர் நூல்களை ஆராய்ந்தனர்—என்னும் வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை கடைசியிலும், செயப்படுபொருள் நடுவிலும் அமைந்திருக்கின்றன. இவ்வாறு அமைவதே முறையாகும்.

# 4. உழைப்பின் உயர்வு

நம் நாட்டில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் மதத்திற்கு இஸ்லாம் என்பது பெயர். இஸ்லாம் மதத்தைப் புதுப்பித்தவர் முகம்மது நபி என்பவர். அவர் மக்களுக்குச் சிறந்த உண்மைகளை உபதேசித்தார். அவரால் நல்வழிப் பட்டவர்கள் பலர் ஆவர்.

ஒரு நாள் ஓர் ஏழைப் பிச்சைக்காரன் முகம்மது நபியிடம் வந்தான். அவன் அவரை வணங்கி, "ஐயனே, நான் ஓர் ஏழை. என் மனைவியும் மக்களும் உணவில்லாமல் பட்டினி கிடக்கிறார்கள். நீங்கள் மனம் இரங்கி ஏதாவது பிச்சை கொடுத்தால் அதைக் கொண்டு என் மனைவி மக்களின் பசியைப் போக்குவேன்" என்று இரந்தான்.

முகம்மது நபி அவனை உற்றுப் பார்த்தார். "உண்மையாக உன்னிடம் ஒன்றுமே இல்லையா? உள்ளதைக் காட்டு, பார்ப்போம்" என்றார். ஏழை அவரை நோக்கி, "என்னிடம் ஒரு சிறிய கம்பளியும், ஒரு பிச்சைப் பாத்திரமுமே உள்ளன. நான் இரவில் படுத்துத் தூங்கும்போது அந்தக் கம்பளியின் ஒரு பாதியைக் கீழே பரப்பிக்கொண்டு, மற்றொரு பாதியைப் போர்த்திக் கொள்வேன். பிச்சைப் பாத்திரம் பிச்சை வாங்கவும், தண்ணீர் முகந்து குடிக்கவும் பயன்படுகிறது. இவை இரண்டுமே எனக்குச் சொந்தமானவை" என்று அவற்றை முகம்மது நபியின் முன் வைத்தான்.

முகம்மது நபி, "இவ்விரண்டையும் என்னிடம் கொடுத்துவிடு" என்று கூறி, கம்பளியையும் பிச்சைப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டார்;

அவன் எதிரிலேயே அவ்விரண்டையும் இரண்டு ரூபாய்க்கு விற்று விட்டார். ஏழை அதைக் கண்டு திகைத்துப் போனான். "கம்பளி போனாலும் போகட்டும். பிச்சைப் பாத்திரம் இல்லாமல் நான் என்ன செய்வேன்! எதில் பிச்சை வாங்குவேன்? எதனால் தண்ணீர் முகந்து குடிப்பேன்?" என்று அவன் மனம் கலங்கினான்.

முகம்மது நபி ஏழையின் மனக் கலக்கத்தைக் கண்டார். அவர் அவனை அன்போடு பார்த்து, "நீ ஏன் கவலைப்படுகிறாய்? இந்த இரண்டு ரூபாயையும் பெற்றுக்கொள். ஒரு ரூபாய்க்கு உணவுப் பொருள் வாங்கி உன் மனைவி மக்களின் பசியைப் போக்கு. மற்றொரு ரூபாய்க்கு ஒரு கோடரி வாங்கிக்கொண்டு இங்கு வா" என்றுகூறி, இரண்டு ரூபாயையும் அவனிடம் கொடுத்தார்.

ஏழை ரூபாயைப் பெற்றுக்கொண்டு சென்றான். அவர் கூறியபடியே ஒரு ரூபாய்க்கு உணவு வாங்கி மனைவி மக்களுக்குக் கொடுத்தான்; ஒரு ரூபாய்க்கு ஒரு கோடரியை வாங்கிக்கொண்டு அவரிடம் திரும்பி வந்தான். முகம்மது நபி அக்கோடரியை வாங்கினார்; தம் கையினாலேயே ஒரு காம்பைச் சீவி அதில் கோத்தார்; அதை ஏழையிடம் கொடுத்து, "நீ இதை எடுத்துக்கொண்டு போ. நாள்தோறும் காட்டில் சென்று விறகு வெட்டு. அதை விற்று உன் மனைவி மக்களைக் காப்பாற்று. ஒரு மாதம் சென்ற பிறகு மறுபடியும் என்னிடம் வா" என்று கூறி அனுப்பினார்.

ஏழை கோடரியைப் பெற்றுக்கொண்டு சென்றான்; அவர் சொன்னபடியே ஒருமாத காலம் செய்தான். ஒரு மாதம் கழிந்ததும் அவன் முகம்மது

நபியிடம் வந்தான்; அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்ருன். முகம்மது நபி அவனைக் கருணையோடு பார்த்தார்; "ஒரு மாத காலத்தை எவ்வாறு கழித்தாய்? இப்பொழுது எப்படி இருக்கிருய்?" என்று கேட்டார்.

ஏழை அவரை நன்றியோடு வணங்கி, "ஐயனே! பிழைக்கும் வழியைக் காட்டி என்னை வாழ்வித்த உங்களை எவ்வாறு வாழ்த்துவேன்! உங்களால் நான் உழைப்பை அறிந்து உயர்வு அடைந்தேன். என் மனைவியும் மக்களும் வயிருர உண்டு சந்தோஷமாக இருக்கிருர்கள். உணவுக்கும் உடைக்கும் செலவழித்தது போக இதோ பத்து ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன்" என்று கூறி, பத்து ரூபாயை அவர் பாதங்களில் வைத்து வணங்கினுன்.

முகம்மது நபி, "அன்பனே! நீ ஆண்டவனை வணங்கு. அவன் அருள்தான் உன்னை நல்வழிப்படுத்தியது. நீ இப்பொழுது உண்மையான உழைப்பின் உயர்வை அறிந்துகொண்டாய். வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்துப் பிழைப்பதைக் காட்டிலும் உடல் வருந்தி உழைத்து உண்டு வாழ்வது இன்பமாக இல்லையா? இப்பொழுது உன் மனைவி மக்கள் பட்டினி இல்லை. உனக்குக் கவலையில்லை. உழைப்பே உயர்வு தரும். உண்மையாக உழைப்பவர்களுக்கே ஆண்டவன் அருள் செய்வார். சந்தோஷமாகப் போ. கடவுள் உன்னைக் கைவிட மாட்டார்" என்று கூறி அனுப்பினுர்.

| | | |
|---|---|---|
| மதம் | பட்டினி | காம்பு |
| இஸ்லாம் | பசி | பாதங்கள் |
| முகம்மது நபி | பிச்சை | நன்றி |
| பிச்சைக்காரன் | கலக்கம் | உழைப்பு |
| மனைவி | கவலை | சந்தோஷம் |
| மக்கள் | கோடரி | ஆண்டவன் |

## கேள்விகள்

1. முகம்மது நபி என்பவர் யார் ?

2. பிச்சைக்காரனிடம் இருந்த பொருள்கள் யாவை ?

3. முகம்மது நபி பிச்சைக்காரனுக்குச் செய்த உபதேசம் என்ன ?

4. பிச்சைக்காரன் உழைப்பின் உயர்வை எவ்வாறு உணர்ந்தான் ?

5. இக்கதையால் நீ தெரிந்து கொள்ளும் உண்மை என்ன ?

## பயிற்சி

1. இக்கதையை மவுனமாக வாசி.

2. இதனை முகம்மது நபி சொல்வதாகச் சொல்.

3. இதனைப் பிச்சைக்காரன் சொல்வதாகச் சொல்.

4. எதிர்ச்சொற்கள் சொல் : ஏழை, உயர்வு, தண்ணீர்.

5. நல்வழி, நன்றி, இன்பமாக, வயிறார—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

6. ஒரே பொருள் உள்ள வேறு சொல் கூறு : பிச்சை, உண்மை, உணவு, அருள்.

7. பாதம், சந்தோஷம்—இவை சமஸ்கிருதச் சொற்கள் ; அடி, மகிழ்ச்சி—இவை தமிழ்ச் சொற்கள்.

பாதம் என்னும் சொல் வரும் இடங்களில் அடி என்னும் சொல்லையும், சந்தோஷம் என்னும் சொல் வரும் இடங்களில் மகிழ்ச்சி என்னும் சொல்லையும் வைத்து வாசி.

8. கீழுள்ள வாக்கியங்களில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள்கள் வரிசை தப்பி இருக்கின்றன. அவற்றைச் சரியாக அமைத்து வாசி :

முகம்மது நபி உபதேசித்தார் உண்மைகளை.
பெற்றுக்கொண்டான் ஏழை ரூபாயை.
முகம்மது நபியை வணங்கினான் ஏழை.

9. இப்பாடத்தில் முதல் பாராவில் உள்ள உயிரெழுத்துக்களைச் சொல்.

10. மெய்யெழுத்துக்கள் மூன்று சொல்.

11. உயிர் மெய்யெழுத்துக்கள் ஐந்து சொல்.

12. பசி—இதில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களை உயிர் வேறு மெய் வேருகப் பிரித்துச் சொல்.

13. கடைசிப் பாராவிலிருந்து உயிரெழுத்தை முதலிலே உடைய சொற்களைப் பொறுக்கிச் சொல்.

14. அவற்றை அகர வரிசையில் ஒன்றன்பின் ஒன்ருக எழுது.

# 5. பொது நலப் பணியாளர்

நம்முடைய நல்வாழ்வுக்காக உழைப்பவர்கள் பலர். அவர்கள் பொதுநலப் பணியாளர் எனப்படுவர். நாம் அவர்களுடைய வேலைகளையும், அவர்கள் எவ்வாறு நமக்காக உழைக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

படத்தில் ஒருவர் தெருவைப் பெருக்கிக் குப்பைகளைக் குவிக்கிறார். ஒருவர் குவித்த குப்பைகளைக் கூடைகளில் எடுத்து வண்டியில் சேர்க்கிறார். ஒருவர் குப்பை வண்டியை ஓட்டுகிறார். இவர்கள் தோட்டிகள் எனப்படுவர். பொது இடங்களைச் சுத்தம் செய்வது இவர்கள் வேலையாகும்.



இவர்கள் தெருக்களையும் சாலைகளையும் நாள் தோறும் பெருக்கி, குப்பைகளை வண்டிகளில் கொண்டுபோய் வெளியில் சேர்ப்பார்கள். தெருக்களில் குப்பைகள் சேர்ந்தால் அவற்றிலிருந்து பல நோய்கள் தோன்றிப் பரவும். ஆகவே நாம் வீட்டைப் போலவே தெருவையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். குப்பைகளைக் கண்ட இடங்களில் போடக் கூடாது; குப்பைத் தொட்டிகளிலேயே போட வேண்டும். தெருக்களில் மல ஜலம் கழிக்கக் கூடாது. சுற்றுப்புறம் சுத்தமாக இருந்தால்தான் நாம் சுக வாழ்வு வாழ முடியும்.

இவர் சுகாதார அதிகாரி. இவர் பொது இடங்கள் சுத்தமாக இருக்கின்றனவா என்று மேற்

பார்வை செய்வார்; தொற்று நோய்கள் உண்டாகாதபடி பொது இடங்களிலும், குடிநீர் நிலைகளிலும் மருந்து போடுவார்; காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் உண்டானால் அவற்றைப் பரவாதபடி தடுப்பார். பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பது இவர் வேலையாகும். நாம் இவர் கூறும் ஆலோசனைகளைக் கேட்டு அவற்றின்படி நடந்துகொள்ள வேண்டும். நாம் அசுத்தமான இடங்களில் சஞ்சரிக்கலாகாது; அசுத்தமான பண்டங்களைத் தின்னலாகாது; அசுத்தமான நீரைக் குடிக்கக் கூடாது.

இவர் அம்மை குத்துபவர். இவர் ஒரு குழந்தைக்கு அம்மை குத்திக் கொண்டிருக்கிறார். இவர் கிராமம் கிராமமாகவும், தெருத் தெருவாகவும் சென்று, சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அம்மை குத்துவார். எங்கேயாவது பெரியம்மை நோய் தோன்றினால் இவர் உடனே அங்குச் சென்று மக்கள் எல்லோர்க்கும் அம்மை குத்துவார்.



இவர் அவ்வாறு செய்யாவிட்டால் மக்கள் பெருவாரியாகப் பெரியம்மைக்குப் பலியாவார்கள். நாம் நம்முடைய குழந்தைகளுக்குத் தப்பாமல் அம்மை குத்தவேண்டும். நாமும் சில வருஷங்களுக்கு ஒரு முறை அம்மை குத்திக் கொள்ள வேண்டும்.

இவர் வைத்தியர். இவர் வேலை செய்யும் இடம் வைத்திய சாலை எனப்படும். இவர் காலையிலும் மாலையிலும் வைத்திய சாலையில் இருந்து கொண்டு

வரும் நோயாளிகளைச் சோதித்து, அவர்களுக்கு மருந்து கொடுப்பார். நமக்கு ஏதாவது நோய் உண்டானால் நாம் உடனே வைத்தியரிடம் செல்ல வேண்டும். அவர் கொடுக்கும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். அவர் கூறும் ஆலோசனைப்படி நடந்து கொள்ள வேண்டும். வியாதியை அலட்சியம் செய்யக் கூடாது.



இவர் விவசாய அதிகாரி. இவர் விவசாயப் பண்ணைகளை வைத்து, அவற்றில் பல சோதனைகளைச் செய்வார்; விவசாயத்திற்கு உரிய நூதன கருவிகளையும், நவீன முறைகளையும் கண்டு பிடித்து உதவுவார்; இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற பயிர் வகைகளையும், குறைந்த காலத்தில் மிகுந்த விளைவைப் பெறும் முறைகளையும் அறிந்து விவசாயிகளுக்கு ஆலோசனை கூறுவார். இவர் கூறும் ஆலோசனைப்படி விவசாயிகள் நடந்து கொண்டால் விவசாயத் தொழில் விரைவில் முன்னேற்றம் அடையும். நாம் விவசாயத்தில் புதிய முறைகளை மேற்கொள்ளாவிட்டால் நாட்டில் உணவுப் பஞ்சம் நீங்காது.



இவர் தபால்காரர். இவர் ஒவ்வொரு நாளும்

வீடு வீடாகச் சென்று, அவர்களுக்கு வந்துள்ள கடிதங்களைக் கொடுப்பார். இவர் தந்திகளையும், மணியார்டர்களையும் கொண்டு வருவார். தபால்காரர் இல்லா விட்டால் வெளியூர்களில் உள்ளவர்களைப் பற்றிய செய்தி எதுவும் நமக்குக் கிடைக்காது.



இவர் போலீஸ்காரர். நகரங்களையும், கிராமங்களையும் பாதுகாப்பது இவர் வேலையாகும். இவர் கலகம், களவு போன்ற கொடுமைகள் நேராதபடி பொது அமைதியைப் பாதுகாக்கிறார். இவர் இராக் காலங்களில் தெருத் தெருவாகச் சுற்றி, திருட்டு, கொள்ளை முதலியவை நடவாதபடி காப்பார்; கொண்டாட்டங்கள், திருவிழாக்கள் நடக்கும் சமயங்களில் மக்களிடையே ஒழுங்கை நிலை நிறுத்தி, கலகமும் குழப்பமும் உண்டாகாதவாறு பாதுகாப்பார். இவர் இல்லாவிட்டால் மக்கள் அச்சம் இல்லாமல் அமைதியாக வாழ முடியாது.



பெரிய நகரங்களில் இவர் சாலைகள் கூடும் சந்திகளில் நின்றுகொண்டு, மக்களையும் வண்டிகளையும் ஒழுங்காகச் செல்லும்படி செய்கிறார். இவர் அவ்வாறு செய்யாவிட்டால் பல விபத்துக்கள் நேரும். நாம் இவர் சொல்லுகிறபடி நடந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு பலர் நமக்காக உழைக்கிறார்கள்; நம்முடைய நல் வாழ்வுக்கு ஒவ்வொரு வகையில்

உதவி செய்கிருர்கள். நாம் அவர்களுக்கு வேண்டும் உதவிகளைச் செய்யவேண்டும். அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாகச் செய்கிருர்களா என்பதைக் கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் அவர்கள் பணியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

| | | |
|---|---|---|
| நல்வாழ்வு | மேற்பார்வை | அம்மை |
| கொலே | பணியாளர் | தொற்று நோய் |
| பெரியம்மை | கலகம் | விவசாயம் |
| குழப்பம் | தோட்டி | காலரா |
| முன்னேற்றம் | அச்சம் | பிளேக் |
| பஞ்சம் | விபத்துக்கள் | குப்பைத்தொட்டி |
| கொள்ளே நோய் | கடிதங்கள் | வைத்தியர் |
| மலஜலம் | சுகாதாரம் | தபால்காரர் |
| நோயாளி | சுற்றுப்புறம் | ஆலோசனே |
| போலீஸ்காரர் | வியாதி | அலட்சியம் |
| களவு | நேர்மை | பண்ணே |

### கேள்விகள்

1. தோட்டிகள் என்ன செய்வார்கள்?
2. சுகாதார அதிகாரியின் வேலேகள் யாவை?
3. அம்மை நோய் வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?
4. வைத்தியர் வேலே செய்யும் இடத்திற்குப் பெயர் என்ன?
5. விவசாய அதிகாரி நமக்கு எப்படி உதவி செய்கிருர்?
6. வெளியூர்ச் செய்திகள் நமக்கு எவ்வாறு கிடைக்கின்றன?
7. போலீஸ்காரர் நமக்கு எவ்வாறு உதவி செய்கிருர்?

## பயிற்சி

1. பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்:

நாள்தோறும், மேற் பார்வை, முன்னேற்றம், ஒத்துழைக்க, பொது நலம், நல்வாழ்வு.

2. போலீஸ்காரர் இல்லாவிட்டால் மக்கள் அமைதியாக வாழ முடியாது—இந்த வாக்கியத்தை, 'போலீஸ்காரர் இருந்தால்தான் மக்கள் அமைதியாக வாழமுடியும்' என்றும் மாற்றிச் சொல்லலாம்.

3. பின்வரும் வாக்கியங்களை இவ்வாறு மாற்றிச் சொல்:

தபால்காரர் இல்லாவிட்டால் வெளியூர்களில் உள்ளவர்களைப் பற்றிய செய்தி எதுவும் நமக்குக் கிடைக்காது.

விவசாயத்தில் புதிய முறைகளைக் கையாளாவிட்டால் நாட்டில் உணவுப் பஞ்சம் நீங்காது.

4. 'சுற்றுப்புறம் சுத்தமாக இருந்தால்தான் நாம் சுகவாழ்வு வாழ முடியும்'—இந்த வாக்கியத்தை, 'சுற்றுப்புறம் சுத்தமாக இல்லா விட்டால் நாம் சுகவாழ்வு வாழ முடியாது' என்று மாற்றலாம்.

5. பின் வரும் வாக்கியத்தை இவ்வாறு மாற்றிச் சொல்:

இவர் கூறும் ஆலோசனைப்படி விவசாயிகள் நடந்து கொண்டால் விவசாயத்தொழில் விரைவில் முன்னேற்றம் அடையும்.

6. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைச் சொல்:

தபால்காரர் கடிதங்களைக் கொடுப்பார்.
வைத்தியர் நோயாளிகளைச் சோதிப்பார்.

7. கீழ்வரும் தொடர்களைப் பிரித்துச் சொல்:
மேற் பார்வை, முன்னேற்றம்.

8. கோடரி, கிராமம், மாதம், கை, உண்மை, உழைப்பு—இவை பெயர்ச் சொற்கள்.

இவற்றுள் கோடரி என்பது ஒரு பொருளின் பெயரைக் குறிக்கிறது. இது பொருட் பெயர்.

கிராமம் என்பது ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கிறது. இது இடப் பெயர்.

மாதம் என்பது ஒரு காலத்தின் பெயரைக் குறிக்கிறது. இது காலப் பெயர்.

கை என்பது ஒரு சினையின் (உறுப்பின்) பெயரைக் குறிக்கிறது. இது சினைப் பெயர்.

உண்மை என்பது ஒரு பண்பின் (குணத்தின்) பெயரைக் குறிக்கிறது. இது பண்புப் பெயர்.

உழைப்பு என்பது ஒரு தொழிலின் பெயரைக் குறிக்கிறது. இது தொழிற் பெயர்.

பெயர்ச் சொல் பொருட் பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என ஆறுவகைப் படும்.

9. இப் பாடத்தில் உள்ள பொருட் பெயர்களைச் சொல்.

10. ,, இடப் பெயர்களைச் சொல்.

11. ,, காலப் பெயர்களைச் சொல்.

12. ,, சினைப் பெயர்களைச் சொல்.

13. குப்பை, தெரு, நாள், பாதம், நேர்மை, குழப்பம்—இவற்றுள் ஒவ்வொன்றும் இன்னின்ன பெயர் என்று சொல்.



# 6. அறிவுள்ள பசு

மேலூர் என்பது ஒரு பெரிய கிராமம். அவ் வூரில் ஒரு பெருமாள் கோவில் உண்டு. அக் கோவிலில் இரண்டு பசுக்கள் இருந்தன. ஒன்று வெள்ளைப் பசு; மற்றொன்று கறுப்புப் பசு. அவை ஒன்று மாறி ஒன்று கறக்கும். அவற்றின் பாலைச் சுவாமி பூஜைக்கு உபயோகப்படுத்துவார்கள். அவ்விரண்டு பசுக்களும் அழகாக இருக்கும்.

அவற்றுள் வெள்ளைப் பசு மிகவும் அழகானது. அது கறுப்புப் பசுவை விட மிகவும் சாது; நல்ல அறிவு உள்ளது. இளஞ் சிறுவர்களும் அஞ்சாமல் அதைத் தொட்டுத் தடவிக்கொடுத்து வந்தார்கள். எல்லோரும் அதனிடம் அன்பாக இருந்தார்கள். கிராம ஜனங்கள் அதை அன்போடு அழைப் பார்கள்; அது பக்கத்தில் வந்து நிற்கும்; அதன்

முகத்தைக் கழுவி மஞ்சள் குங்குமம் இடுவார்கள்; அதற்குச் சோறும் பக்ஷணமும் கொடுப்பார்கள். அது தினந்தோறும் வீடுவீடாக வரும்; அவரவர்கள் கொடுப்பதைச் சாப்பிட்டுவிட்டுப் போகும். அதற்கு அவ்வூரில் எல்லா வீடுகளும் தெரியும். அது எல்லோரையும் அடையாளம் கண்டு கொள்ளும்.

அப்பசு ஒரு நாள் வெளியில் மேயப் போயிற்று. சில கெட்ட பிள்ளைகள் கூடிக்கொண்டு அதைத் துரத்தினார்கள். அது வேகமாக ஓடி வந்தது. வரும் வழியில் அது கால் இடறிக் கீழே விழுந்தது. அங்கு இருந்த ஒரு கூரான கல் அதன் காலில் ஆழமாக வெட்டிவிட்டது. வெட்டுவாயிலிருந்து இரத்தம் பெருகியது. பாவம்! அது நோய் தாங்காமல் 'ஓ' என்று கத்தியது. பிள்ளைகள் பயந்து ஓடிவிட்டார்கள். அது மெல்ல எழுந்தது; நொண்டிக்கொண்டே ஊருக்கு வந்தது.

அந்த ஊரில் ஓர் இரண வைத்தியர் இருந்தார். அந்தப் பசுவுக்கு அவர் வீடு தெரியும். அவர் காயம் பட்டவர்களுக்குக் கட்டுக் கட்டும்போது அது பல முறை பார்த்து இருக்கிறது. ஆகவே அது மெல்ல நடந்து வந்து அவர் வீட்டுத் தெருவில் படுத்துக் கொண்டு கத்தியது. அப்போது வைத்தியர் வீட்டில் இல்லை. பசுவின் கத்தலைக் கேட்டு ஜனங்கள் வந்து கூடினார்கள். அவர்கள் அதற்குப் பழமும் பக்ஷணமும் கொண்டுவந்து கொடுத்தார்கள். அது அவற்றைத் தொடக்கூட இல்லை; எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. அவர்கள் அதன் காலைக் கவனிக்கவில்லை. அதனால் அவர்கள் ஏதாவது விஷக்கடியோ என்று சந்தேகப்பட்டார்கள்.

அந்தச் சமயத்தில் வெளியில் போயிருந்த வைத்தியர் வந்தார். அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்து, "என்ன கூட்டம்?" என்று கேட்டார். பசு வைத்தியர் குரலைக் கேட்டுவிட்டது. உடனே அது 'அம்மா!' என்று கதறியது. வைத்தியர் வேகமாக அதன் அருகில் வந்தார். பசு அவரைப் பார்த்தது. அவர் காலில் முகத்தை வைத்துக் கொண்டு மறுபடியும் கத்தியது. அதன் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டு இருந்தது. அது தன் காயம்பட்ட காலை வைத்தியர் முன் நீட்டியது. வைத்தியர் அதன் காலில் காயம்பட்டிருப்பதைக் கண்டார். வாயில்லாத பிராணி நோயால் துடி துடிப்பதை வைத்தியர் பார்த்தார். அவர் வீட்டினுள் சென்று மருந்துப் பையை எடுத்து வந்தார்; இரத்தத்தைத் துடைத்தார்; காயத்தைக் கழுவி மருந்து வைத்துக் கட்டினார். அன்று பகல் முழுதும் அது கண்ணைத் திறக்கவே இல்லை; வலி தாங்காமல் மயங்கிக் கிடந்தது. அன்று மாலை வைத்தியர் ஆத்திக்கீரையும் புல்லும் கொண்டு வந்து கொடுத்தார். பசு மெல்ல அவற்றில் சிறிதுதின்றது.

மறுநாள் காலையில் வைத்தியர் பசுவின் கட்டை அவிழ்த்தார்; மறுபடியும் புது மருந்து வைத்துக் கட்டினார். அன்று அதற்கு வலி சிறிது குறைந்து இருந்தது. ஊரார் தவிடும் சோறும் கொண்டுவந்து கொடுத்தனர். அது அவற்றைத் தின்றது. பிறகு மெல்ல எழுந்து நடந்தது; நொண்டிக்கொண்டே கோவிலுக்குப் போயிற்று; அங்குத் தன் கன்றையும், கறுப்புப் பசுவையும் கண்டு கண்ணீர் விட்டது. அவற்றிற்குத் தன் காயம்பட்ட காலைக் காட்டிற்று.

அது தினந்தோறும் வைத்தியர் வீட்டுக்கு வந்தது. அவர் நாள்தோறும் அதற்கு மருந்து வைத்துக் கட்டி வந்தார். அவ்வாறு ஒரு வாரம் நடந்தது. அந்நாள்களில் அதனுல் வெளியில் சென்று மேய முடியவில்லை. அதனுல் அது வீடு வீடாகப் போய் ஆகாரம் வாங்கிச் சாப்பிட்டு வந்தது. மக்கள் புல், கீரை, தவிடு, சோறு முதலியவற்றை அன்போடு அதற்குக் கொடுத்து வந்தார்கள். ஒரு வாரத்தில் அதன் காயம் முழுதும் ஆறிவிட்டது. அது நன்ருக நடக்க ஆரம்பித்தது. பிறகு அது முன்போலவே நடந்து வந்தது.

, அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அதனிடம் மக்களுக்கு அன்பு அதிகம் ஆயிற்று. அதன் அறிவை மக்கள் புகழ்ந்தார்கள். அவர்கள் அதைத் ‘தெய்வப் பசு’ என்று கொண்டாடினுர்கள்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | அறிவு | குங்குமம் |
| பக்ஷணம் | அடையாளம் | இரண வைத்தியர் |
| காயம் | விஷக்கடி | கண்ணீர் |
| சம்பவம் | அஞ்சாமல் | வெட்டுவாய் |

### கேள்விகள்

1. வெள்ளைப் பசு எப்படிப்பட்டது?
2. பசுவின் காலில் காயம் உண்டானது ஏன்?
3. பசு காயம் பட்டபின் என்ன செய்தது?
4. பசு காயத்தை எவ்வாறு ஆற்றிக்கொண்டது?
5. மக்கள் அதைத் ‘தெய்வப் பசு’ என்று கொண்டாடியது ஏன்?

## பயிற்சி

1. இதை மவுனமாக வாசி.

2. இந்தச் சம்பவத்தைப் பசு சொல்வதாகச் சொல்.

3. ,, வைத்தியர் சொல்வதாகச் சொல்.

4. உனக்குத் தெரிந்த இது போன்ற சம்பவம் ஒன்றைச் சொல்.

5. எதிர்ச் சொற்கள் கூறு: நல்ல, வேகமாக, புகழ்ந்தார்கள், அழகாக.

6. 1. வைத்தியர் இரத்தத்தைத் துடைத்தார்.
   2. நீ ஏன் கவலைப்படுகிருய்?
   3. நான் என்ன செய்வேன்!

இவை வாக்கியங்கள். இவற்றுள்

1. முதலாவது ஒரு விஷயத்தைச் சொல்லுகிறது. இது போன்ற வாக்கியங்களின் கடைசியில் முற்றுப்புள்ளி (.) இடவேண்டும்.

2. இரண்டாவது கேள்வி கேட்கிறது. அதன் இறுதியில் கேள்வி அல்லது விஞக்குறி (?) இடவேண்டும்.

3. மூன்ருவது உணர்ச்சியைக் காட்டுகிறது. அதன் முடிவில் உணர்ச்சிக் குறி (!) இடவேண்டும்.

4. இவை எவ்வகைப் பெயர்ச் சொற்கள்?
   பசு, வீடு, நாள், கால், வெள்ளே, ஈகை.

5. புகழ், தின், ஓடு, வா, கலங்கு, வாங்கு—இச்சொற்களிலிருந்து உண்டாகும் தொழிற் பெயர்களேச் சொல்.



# 7. தபால்

தந்தை: கண்ணு! நான் தபால் ஆபீசுக்குப் போகிறேன்; நீயும் வருகிறாயா?

மகன்: அங்கு என்ன செய்யப்போகிறீர், அப்பா?

தந்தை: மதுரையில் உள்ள உன் மாமனுக்குக் கடிதம் அனுப்பப் போகிறேன்.

மகன்: இங்கிருந்து அனுப்பும் கடிதம் மதுரைக்கு எப்படி அப்பா போய்ச் சேரும்?

தந்தை: என்னோடு வா, காட்டுகிறேன்.

மகன்: அப்பா, இதோ 'தபால்—தந்தி ஆபீசு' என்று போர்டு போட்டிருக்கிறதே, இது தானே தபால் ஆபீசு?

தந்தை: ஆம். வா, உள்ளே போகலாம்.

மகன்: அங்கு என்ன அப்பா அவ்வளவு கூட்டம்?

**தந்தை :** மேலே 'ஸ்டாம்புகள் விற்கும் இடம்' என்று எழுதியிருக்கிறது பார். அங்குத் தபால் கார்டு, கவர், ஸ்டாம்புகள் எல்லாம் விற்பார்கள். அவர்கள் ஸ்டாம்புகள் வாங்குவதற்காகக் கூடியிருக்கிறார்கள். அவர்கள் அறியாமையால் அவ்வாறு கூட்டம் கூடிக் குழப்பம் செய்கிறார்கள். அது தவறு. ஒருவர்பின் ஒருவர் வரிசையாக நின்று ஒவ்வொருவராக வாங்க வேண்டும்.



**மகன் :** அப்பா, அதோ ஒருவர் எழுதிக் கொண்டு இருக்கிறாரே, அவர் என்ன எழுதுகிறார்?

**தந்தை :** அவர் கடிதம் எழுதுகிறார். நீ இங்கு இரு. நான் ஒரு கார்டு வாங்கி எழுதிக்கொண்டு வருகிறேன்.



**மகன் :** எழுதிய பிறகு கார்டை என்ன செய்ய வேண்டும்?

**தந்தை :** இதோ பார். இது தபால் பெட்டி. நாம் எழுதிய கடிதங்களைத் தபால் பெட்டியில் போட வேண்டும்.

**மகன் :** பிறகு அக்கடிதம் என்ன ஆகும்?

**தந்தை :** அதோ தபால் சேவகர் வருகிறார். அவர் என்ன செய்கிறார் பார்.

மகன் : ஆம் அப்பா. அவர் தபால் பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுத்துக் கொண்டு போகிறார்.



தந்தை : இந்த ஜன்னல் வழியாக உள்ளே பார். அங்கு என்ன செய்கிறார்கள் ?

மகன் : கடிதங்களை முத்திரை இட்டுப் பைகளில் கட்டுகிறார்கள்.

தந்தை : பிறகு என்ன நடக்கிறது என்பதைப் பார்.

மகன் : தபால் பைகளை எடுத்துக் கொண்டு போய் வண்டியில் ஏற்றுகிறார்கள். இந்த வண்டியே நேராக மதுரைக்குப் போகுமா, அப்பா ?



தந்தை : இதில் மதுரைக்குப் போகும் கடிதங்கள் மாத்திரம் இல்லை. பல ஊர்களுக்குப் போக வேண்டிய கடிதங்களும் இருக்கின்றன. அவற்றை இரயில் நிலையத்திற்குக் கொண்டுபோவார்கள்.

மகன் : அங்கு அவற்றை என்ன செய்வார்கள் ?

தந்தை : வா, இரயில் ஸ்டேஷனுக்குப்

போவோம். அங்கு என்ன செய்கிறார்கள் என்பதைக் காட்டுகிறேன்.

**மகன் :** அப்பா, இதோ இரயில் வருகிறது அப்பா !

**தந்தை :** மேடையின் ஓரத்தில் நிற்காதே. ஒதுங்கி நில். இந்த வண்டியைப் பார். இது தான் தபால் வண்டி. தபால் சேவகர் தபால் ஆபீசிலிருந்து கொண்டு வந்த பைகளைக் கொடுத்துவிட்டு வேறு பைகளை வாங்கிக் கொள்ளுகிறார், பார்.



**மகன் :** தபால் சேவகர் அந்தப் பைகளை ஏன் வாங்கிக் கொள்ளுகிறார் ?

**தந்தை :** அவைகளில் வேறு இடங்களிலிருந்து இந்த ஊருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் இருக்கின்றன. தபால் வண்டியின் உள்ளே பார். அங்கு இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் ?

**மகன் :** அவர்கள் தபால் சேவகர் கொண்டு வந்து கொடுத்த பைகளை அவிழ்த்து, கடிதங்களைப் பிரித்து வெவ்வேறு அறைகளில் அடுக்குகிறார்கள். ஏன் அப்பா அப்படிச் செய்கிறார்கள் ?

**தந்தை :** ஒவ்வொரு தபாலாபீசிலிருந்தும் வரும் பைகளில் வெவ்வேறு ஊர்களுக்குப் போக வேண்டிய கடிதங்கள் இருக்கும் அல்லவா ? இவர்கள் அக்கடிதங்களை ஊர்வாரியாகப் பிரித்து அடுக்கிக் கொண்டே போவார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அதைச் சார்ந்த இடங்களுக்குப் போக

வேண்டிய கடிதங்களைப் பையில் இட்டுக் கட்டிக் கொடுத்து விடுவார்கள்.

மகன் : தபால் சேவகர் வாங்கிக் கொண்ட பைகளை என்ன செய்வார், அப்பா?

தந்தை : அவர் அந்தப் பைகளைத் தபால் ஆபீசுக்குக் கொண்டு போவார். வா, நாம் மறுபடியும் தபால் ஆபீசுக்குப் போவோம்; அங்கு என்ன செய்கிருர்கள் என்பதைப் பார்ப்போம்.

மகன் : அப்பா, தபால் வண்டியும் இப்பொழுதுதான் வருகிறது. தபால் சேவகர் பைகளை எடுத்து வருகிருர்.

தந்தை : உள்ளே பார். அவற்றை என்ன செய்கிருர்கள் என்பதைக் கவனி.

மகன் : பைகளை அவிழ்த்துக் கடிதங்களை எடுக்கிருர்கள்; கடிதங்களில் முத்திரை அடிக்கிருர்கள; முத்திரை இட்ட கடிதங்களை வேறு வேருகப் பிரித்து அடுக்குகிருர்கள். ஏன் அப்பா, அப்படிச் செய்கிருர்கள்?



தந்தை : அவற்றில் வெவ்வேறு தெருவில் உள்ளவர்களுக்குச் சேர வேண்டிய கடிதங்களும் கலந்திருக்கும் அல்லவா? அவர்கள் அவற்றைத் தெருவாரியாகப் பிரித்து எடுக்கிருர்கள். பிரித்து எடுத்த கடிதங்களை ஒவ்வொரு தபால்காரரும் எடுத்துக்கொண்டு தெருத் தெருவாகப் போய் வீடுவீடாகக் கொடுப்பார்.

**மகன் :** ஆம் அப்பா, அதோ தபால்காரர்கள் கடிதங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார் கள். நம் தெருவுக்கு வரும் தபால்காரர்கூட அதோ போகிறார். அப்பா, தந்தி ஆபீசு எங்கு இருக்கிறது?

**தந்தை :** அதோ 'தந்தி அனுப்பும் இடம்' என்று எழுதியிருக்கிறது, பார். அதுதான் தந்தி ஆபீசு. மிகவும் அவசரமான செய்தியாக இருந் தால் தந்தி அனுப்புவார்கள். அது சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிடும்.

**மகன் :** அப்பா, அதோ 'மணியார்டர் செய் யும் இடம்' என்று எழுதியிருக்கிறதே, அது என்ன?

**தந்தை :** அது பணம் அனுப்பும் இடம். கடி தத்தைப் போலவே பணத்தையும் வெளியூரில் உள்ளவர்களுக்கு அனுப்பலாம். அதற்கு மணி யார்டர் என்பது பெயர்.

**மகன் :** பதிவு செய்வது என்றால் என்ன அப்பா? அதோ 'பதிவு செய்யும் இடம்' என்று எழுதியிருக்கிறதே, அங்கு என்ன செய்வார்கள்?

**தந்தை :** நாம் அனுப்பும் கடிதமோ, பொருளோ பத்திரமாகப் போய்ச் சேரவேண்டு மானால் பதிவு செய்து அனுப்ப வேண்டும். பதிவு செய்து அனுப்பினால் தப்பாமல் போய்ச் சேரும். போய்ச் சேர்ந்ததற்கு அடையாளமாகப் பெற்றுக் கொண்டவர்கள் கையெழுத்திட்ட சீட்டு நமக்குத் திரும்பிவரும். பதிவு செய்த தபாலைப் பெற்றுக் கொண்டவர்கள் பிறகு இல்லை என்று ஏமாற்ற முடி யாது. அங்கு என்ன எழுதியிருக்கிறது, பார்.

**மகன் :** 'சேவிங்ஸ் பாங்க்' என்று எழுதி யிருக்கிறது. அது என்ன அப்பா? அங்கு என்ன நடக்கிறது?

தந்தை : அது சேமிப்பு நிதி. மக்கள் தங்கள் செலவு போக மிகுந்த பணத்தை அதில் சேர்த்து வைப்பார்கள். வேண்டும்போது திரும்ப வாங்கிக் கொள்வார்கள். பணத்தைக் கையில் வைத்திருந்தால் செலவழிந்து விடும் அல்லவா ? ஏழைகளுக்கு இந்த நிதி மிகவும் உபகாரமாக இருக்கிறது.

மகன் : அப்பா, தபால் போக்கு வரவு எப்படி நடக்கிறது என்பது எனக்கு நன்ருக விளங்கிவிட்டது. தபால் ஆபீசால் மக்கள் அடையும் நன்மைகளையும் தெரிந்து கொண்டேன்.

தந்தை : அதற்காகவே உன்னை அழைத்து வந்தேன். வா, வீட்டிற்குப் போவோம்.

| | | |
|---|---|---|
| தபால் ஆபீசு | ஸ்டேஷன் | பதிவு |
| ஸ்டாம்புகள் | தபால் வண்டி | பத்திரமாக |
| அறியாமை | வெவ்வேறு | அடையாளம் |
| கவர் | அவசரமான | சேவிங்ஸ் பாங்க் |
| தபால் பெட்டி | செய்தி | சேமிப்பு நிதி |
| இரயில் நிலையம் | மணியார்டர் | செலவு |
| போக்கு வரவு | கையெழுத்து | உபகாரம் |

## கேள்விகள்

1. தபால் பெட்டியில் போடப்படும் கடிதங்களை என்ன செய்கின்றனர் ?
2. இரயிலில் உள்ள தபால் உத்தியோகஸ்தர்களின் வேலை என்ன ?
3. இரயிலிலிருந்து வரும் தபால் பைகளைத் தபால் ஆபீஸில் என்ன செய்கிருர்கள் ?
4. அவசரச் செய்தி அனுப்புவதற்கு என்ன ஏற்பாடு உள்ளது ?
5. தபால் ஆபீஸில் நடைபெறும் வேலைகள் யாவை?

## பயிற்சி

1. உங்கள் ஊர்த் தபாலாபீஸ் எங்குள்ளது, சொல்.

2. அங்கிருந்து தபால் எப்படிச் செல்கிறது, சொல்.

3. உங்கள் ஊர்த் தபாலாபீஸைப் பார்த்து அங்கு நடப்பவைகளைச் சொல்.

4. வெவ்வேறு அவசரமான, பத்திரமாக, அடையாளம், பேரக்கு வரவு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

5. இப்பாடத்தில் வந்துள்ள ஆங்கிலச் சொற்களைச் சொல். அவற்றிற்குத் தமிழ்ச் சொல் தெரிந்துகொள்.

6. வெவ்வேறு தனி வாக்கியங்களாகப் பிரித்துச் சொல் :

கடிதங்களை முத்திரை இட்டுப் பைகளில் கட்டுகிறார்.

பைகளை அவிழ்த்துக் கடிதங்களை எடுக்கிறார்கள்.

7. ஒரு வாக்கியமாகச் சேர்த்துச் சொல் :

அவர் தபால் பெட்டியைத் திறக்கிறார். அவர் கடிதங்களை எடுத்துக்கொண்டு போகிறார்.

8. தமிழ்மொழி, இஸ்லாம், தபால் பெட்டியில், முத்திரை, வேகமாக—இவற்றைக் கீழே கோடிட்ட இடங்களில் பொருத்தமாக வைத்து வாசி :

முகம்மது நபி——மதத்தைப் புதுப்பித்தார்.
——நமக்குத் தாய்மொழி ஆகும்.
எழுதிய கடிதத்தை——போடவேண்டும்.
தபால் சேவகர் கடிதங்களுக்கு —— அடிப்பார்.
பசு——ஓடி வந்தது.

9. இரயில் வருகிறது—இது வாக்கியம். இது முடிவான கருத்தைத் தெரிவிக்கிறது. இதில் 'இரயில்' என்பது எழுவாய்; 'வருகிறது' என்பது பயனிலை. இந்த வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லை. இவ்வாறு

செயப்படுபொருள் இல்லாமலும் வாக்கியம் அமைவது உண்டு.

10. இந்த வண்டியைப் பார்—இது ஒரு வாக்கியம். இதுவும் முடிவான கருத்தைத் தெரிவிக்கிறது. இதில் 'பார்' என்பது பயனிலை; 'வண்டியை' என்பது செயப்படுபொருள். இந்த வாக்கியத்தில் எழுவாய் இல்லை. 'நீ' என்னும் எழுவாய் மறைந்திருக்கிறது. இவ்வாறு சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நிற்பதும் உண்டு.

11. இந்தப் பாடத்திலிருந்து செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்கள் மூன்று சொல்.

12. எழுவாய் மறைந்து நிற்கும் வாக்கியங்கள் மூன்று சொல்.

13. மறைந்து நிற்கும் எழுவாயைச் சேர்த்து வாசி:

(1) அதற்காகவே உன்னை அழைத்து வந்தேன்.

(2) கடிதங்களை முத்திரை இட்டுப் பைகளில் கட்டுகிறார்கள்.

(3) அங்கு என்ன செய்யப்போகிறீர்?



# 8. காடு

மிக்க நலமுடைய மரங்கள்—பல
விந்தைச் சுவையுடைய கனிகள்—எந்தப்
பக்கத்தை யும்மறைக்கும் வரைகள்—அங்குப்
பாடி நகர்ந்து வரும் நதிகள்.

நெஞ்சில் கனல்மணக்கும் பூக்கள்—எங்கும்
நீளக் கிடக்கும் இலைக் கடல்கள்—மதி
வஞ்சித் திடும்அகழிச் சுனைகள்—முட்கள்
மண்டித் துயர்கொடுக்கும் புதர்கள்.

ஆசை பெறவிருக்கும் மான்கள்—உள்ளம்
அஞ்சக் குரல்பழகும் புலிகள்—நல்ல
நேசக் கவிதைச் சொல்லும் பறவை—அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு.

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்—அதன்
சத்தத்தி னில்கலங்கும் யானை—அதன்
முன்னின்று ஓடும்இள மான்கள்—இவை
முட்டாது அயல்பதுங்கும் தவளை.

—பாரதியார்

## பயிற்சி

1. நலம் - அழகு. விந்தை - அற்புதம். சுவை - ருசி. கனி - பழம். வரை - மலை. நதி - ஆறு—இவ்வாறு கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொள்.

கனல், மணம், கடல், மதி, அகழி, மண்டி, உள்ளம், நேசம், கவிதை, இச்சை, சத்தம், அயல்.

2. சுவை, மணம், நேசம்—இவை பெயர்ச் சொற்கள். இவற்றிலிருந்து சுவைத்தான், மணக்கும், நேசித்தார் என்னும் சொற்கள் உண்டாகும். இவை வினைச்சொற்கள். இவ்வாறே சில பெயர்ச்சொற்களிலிருந்து வினைச்சொற்கள் உண்டாக்கலாம்.

3. புகழ், உதவி, உபதேசம், பசி—இப்பெயர்ச் சொற்களிலிருந்து உண்டாகும். வினைச்சொற்களைச் சொல்.

4. உண்மையாக உழைப்பவர்களுக்கே ஆண்டவன் அருள் செய்வார். இவ்வாக்கியத்தை உண்மையாக உழைக்காதவர்களுக்கு ஆண்டவன் அருள் செய்யமாட்டார் என்று மாற்றினாலும் பொருள் மாறுபடாது.

5. பின்வரும் வாக்கியங்களை இவ்வாறு மாற்றிச் சொல் :

பொய் சொல்லாதவர்களுக்கே புகழ் உண்டாகும்.
கல்வி கற்றவர்களுக்கே மக்கள் பெருமை செய்வர்.
அழுத குழந்தைக்கே பால் கிடைக்கும்.
செல்வம் உள்ளவனே சிறப்பாக வாழ்வான்.

6. மேலூரில் பெருமாள் கோவில் உண்டு—இவ் வாக்கியத்தை, மேலூரில் பெருமாள் கோவில் உண்டா?' என்று மாற்றி அமைத்தால் இது வினு (கேள்வி) வாக்கியமாகும்.

7. கீழ்வரும் வாக்கியங்களைக் கேள்விகளாக மாற்று :

இரயில் வருகிறது.
அது பணம் அனுப்பும் இடம்.
இவர் தபால்காரர்.
உண்மை உயர்வு தரும்.

8. உனக்குத் தபாலாபீஸ் உள்ள இடம் தெரியுமா ?

9. கார்டு எங்குக் கிடைக்கும் ?

10. கடிதத்தை ஏன் தபால் பெட்டியில் போட வேண்டும் ?

11. இந்த வண்டியே மதுரைக்குப் போகுமோ ?

12. தபால் கடிதங்களைக் கொண்டு கொடுப்பவர் யார் ?

இவையெல்லாம் கேள்விகள் அல்லது வினுக்கள். கேள்வி கேட்க உபயோகப்படும் எழுத்துக்கள் ஆ, எ, ஏ, ஓ, யா என்பன. இவற்றுள் ஆ, ஓ என்னும் இரண்டு எழுத்துக்களும் சொல்லுக்குக் கடைசியில் வரும். எ, யா என்னும் இரண்டு எழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வரும். ஏ என்னும் எழுத்து சொல்லுக்கு முதலிலும் கடைசியிலும் வரும்.



# 9. அயலான் யார்?

நமது நாட்டின் பழமையான மதம் இந்து மதம் ஆகும். இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்துக்கள் எனப்படுவர். இப்பொழுது இந்துக்களைத் தவிர வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் நம் நாட்டில் வாழ்கின்றனர். அவர்களுள் முகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் முக்கியமானவர்கள். முகம்மதியர்கள் பின்பற்றுவது இஸ்லாம் மதம். கிறிஸ்தவர்கள் அனுஷ்டிப்பது கிறிஸ்து மதம் ஆகும். இஸ்லாம் மதத்தைப் பரப்பியவர் முகம்மது நபி என்னும் பெரியார் ஆவர். கிறிஸ்து மதத்தை ஏசுநாதர் என்னும் மகான் தோற்றுவித்தார்.

ஏசுநாதர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பாலஸ்தீன நாட்டில் உள்ள எருசலேம் என்னும் நகரில் தோன்றினார். ஆண்டவன் அருளால்

அவருக்கு இளமையிலேயே ஞானோதயம் உண்டா யிற்று. அவர் தாம் பெற்ற ஞானத்தை உலக மக்க ளுக்கெல்லாம் உணர்த்த விரும்பினர்; மக்கள் எல்லோரையும் நல்வழிப்படுத்தி நல்லவர்களாக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் தமது தெய்வீக சக்தியால் பல அரிய அற்புதங்களைச் செய்தார். மக்கள் அவர் பெருமையை உணர்ந்து பெருங்கூட்டமாக அவரைத் தொடர்ந்தார்கள். அவர் தம்மைத் தொடர்ந்து வரும் மக்களுக்குத் தெய்வ பக்தியையும், அன்பு மார்க்கத்தையும், போதித்தார்; அரிய உண்மைகளை எளிய கதைக ளாக எல்லோர்க்கும் புரியும்படி உபதேசித்து வந்தார்.

ஒரு நாள் ஏசுநாதர் தம் சீடர்களோடு ஓர் இடத்தில் அமர்ந்திருந்தார். அங்கு ஒரு நியாய வாதி வந்தார். அவர் ஏசுநாதரை நோக்கி, "மர ணம் அடைந்த பிறகு நற்கதி பெற நான் இப் பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

ஏசுநாதர், "நீ மனமார உன்னைக் கடவு ளுக்கே அர்ப்பணம் செய். எந்தக் காரியம் செய் தாலும் கடவுளைத் துதிப்பதை மறவாதே. உன் னைக் கருதுவதைப் போலவே அயலாரையும் கருது" என்று பதில் அளித்தார்.

நியாயவாதி மறுபடியும் "அயலார் என் றீர்களே, அவர்கள் யார்?" என்று கேட்டார். ஏசுநாதர் அதற்குப் பதிலாக ஒரு கதை சொன் னார்; அந்தக் கதையின் மூலமாக அயலார் யார் என்பதை உணரும்படிச் செய்தார்.

ஒரு சமயம் செல்வன் ஒருவன் தன் ஊரி

லிருந்து வேருேர் ஊருக்குச் செல்லப் புறப்பட்டான். அவன் சென்ற வழி காடும் மலையுமாக இருந்தது. அவன் அவ்வழியில் தனியனுகச் சென்று கொண்டிருந்தான். அந்தக் காட்டில் திருடர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அவ் வழிப்போக்கனைக் கண்டனர். அவனது தோற்றத்திலிருந்து அவன் ஒரு செல்வன் என்பதையும், அவனிடம் நிறையப் பணம் இருக்கிறது என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டனர்; உடனே கூட்டமாகக் கூடிவந்து அவனை வழி மறித்துத் தாக்கினர். அவன் தன்னைக் காத்துக் கொள்ளச் சிறிது நேரம் திருடர்களோடு போராடினுன். ஆனுல் ஒருவன் பலரை எவ்வளவு நேரம் எதிர்த்து நிற்க முடியும்? கடைசியில் திருடர்கள் அவனை நையப் புடைத்துக் காயப்படுத்தி வீழ்த்தி விட்டு அவனிடம் இருந்த பணத்தை யெல்லாம் கவர்ந்துகொண்டு காட்டிற்குள் புகுந்து மறைந்து விட்டனர். அவன் அவ்வழியிலேயே பேச்சு மூச்சற்றுப் பிணம் போல விழுந்து கிடந்தான்.

சிறிது நேரம் கழித்து அவ்வழியே ஒரு சாமியார் சென்ருர். அவர் காயமுற்றுக் கிடந்த அம்மனிதனைக் கண்டும் அவனுக்கு உதவி செய்யாமல் காணுதவர் போல ஒதுங்கிச் சென்றுவிட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் வேருெரு சாதாரண வழிப்போக்கன் அவ்வழியே சென்ருன். அவனும் காயமுற்று மயங்கிக் கிடந்த அச்செல்வனைக் கண்டான். 'நமக்கேன் இந்தத் தொல்லை? இவனுக்கு உதவி செய்யப் போனுல் அது நமக்கு ஆபத்தாக முடியும்' என்று எண்ணி விரைவாக அவ்விடத்தை விட்டு விலகிச் சென்ருன்.

பிறகு மூன்றாவதாக அவ்வழியே வேறொருவன் வந்தான். அவன் வழியிடையில் புண்பட்டு விழுந்துகிடந்த அச்செல்வனைக் கண்டான். கண்டதும் அவன் சட்டென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கி அருகில் சென்று பார்த்தான். அவன் அச்செல்வன் நிலையைக் கண்டு மனம் இரங்கி, அவனை எடுத்து மடிமேல் வைத்து, புண்களைக் கழுவி மருந்து வைத்துக் கட்டினான். செல்வன் சிறிது மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்த்தான். பிறகு அவ்வழிப்போக்கன் அவனைத் தன் குதிரைமீது ஏற்றிக்கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்றான். அங்கு அவனை ஒரு சத்திரத்தில் சேர்த்து வேண்டும் உதவிகளைச் செய்தான். மறு நாள் காலையில் அவன் சத்திரத் தலைவனிடம் வேண்டிய பணம் கொடுத்து அக்காயம் பட்டவனை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டுத் தன் ஊருக்குச் சென்றான்.

இக் கதையைக் கூறி முடித்தபின் ஏசுநாதர் நியாயவாதியை நோக்கி, "இம்மூவரில் கள்ளரிடம் அகப்பட்டு அடிபட்ட செல்வனுக்கு நல்ல அயலான் யார்?" என்று கேட்டார்.

அதற்கு நியாயவாதி, "அவனுக்கு உதவி செய்த புண்ணியனாகிய மூன்றாவது மனிதனே" என்று பதிலளித்தார். ஏசுநாதர், "அவனைப் போலவே நீயும் பிறர்க்கு உதவி செய்" என்றார்.

| | | |
|---|---|---|
| பழமை | நியாயவாதி | புண்பட்டு |
| பின்பற்று | தனியன் | அருகில் |
| மகான் | தோற்றம் | நிலைமை |
| அனுஷ்டி | வழிமறித்து | மயக்கம் |
| ஆண்டு | நையப்புடைத்து | தெளிந்து |
| ஞானோதயம் | சாமியார் | இரங்கி |
| நல்வழி | கவர்ந்து | உதவி |
| பெருமை | போராடி | கவனி |
| அர்ப்பணம் | வீழ்த்தி | புண்ணியன் |
| உபதேசம் | புகுந்து | அளித்தார் |
| மரணம் | காயமுற்று | சத்திரம் |
| மனமார | தொலலை | அயலான் |

## கேள்விகள்

1. நியாயவாதி ஏசுநாதரைக் கேட்டது யாது ?
2. நியாயவாதிக்கு ஏசுநாதர் கூறிய பதில் என்ன ?
3. செல்வனுக்கு வழியில் என்ன நேர்ந்தது ?
4. அடிபட்டுக்கிடந்த செல்வனுக்கு உதவி செய்தவன் யார் ?
5. ஏசுநாதர் செய்த உபதேசம் யாது ?

## பயிற்சி

1. எதிர்ச் சொற்கள் கூறு: பெருமை, மரணம், தோற்றம், புண்ணியன், ஏற்றி.

2. ஞானோதயம், மனமார, அகப்பட்டு, ஆபத்து, அற்புதங்கள்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

3. இந்தக் கதையை மவுனமாக வாசி.

4. பாடசாலை நூல் நிலையத்திலிருந்து ஏசுநாதரின் உபதேசக் கதைகள் உள்ள புத்தகங்களை வாங்கிக் கதைகளை வாசி.

5. இராமகிருஷ்ணருடைய உபதேசக் கதைகள் உள்ள புத்தகத்தை வாங்கிக் கதைகளை வாசி.

6. நமக்குத் தாய்மொழி தமிழ். இது வாக்கியம். இதில் தமிழ் என்பது பயனிலை. அது பெயர்ச்சொல். இவ்வாறு சில வாக்கியங்களில் பெயர்ச்சொல் பயனிலையாக வருவது உண்டு.

7. கீழே கோடிட்ட இடங்களில் பொருத்தமான பெயர்ப் பயனிலைகளைச் சேர்த்து வாசி:

முகம்மதியர் பின்பற்றும் மதம் ———
கிறிஸ்துவ மதத்தைத் தோற்றுவித்தவர் ———
வைத்தியர் வேலை செய்யும் இடம் ———
மக்களிடையே அமைதியைப் பாதுகாப்பவர் ———

8. பசு இருந்தது—ஒருமை.
பசுக்கள் இருந்தன—பன்மை.

இவ்வாக்கியங்களில் எழுவாய் ஒருமையானால் பயனிலையும் ஒருமையாகவும், எழுவாய் பன்மையானால் பயனிலையும் பன்மையாகவும் இருக்கின்றன. இவ்வாறு அமைவதே முறை. இம்முறை மாறி அமைவது பிழையாகும்.

9. பின் வரும் வாக்கியங்களில் ஒருமை எழுவாயைப் பன்மை எழுவாயாக மாற்றி அமைத்து வாசி:

மேலூரில் கோவில் இருந்தது.
பசு வேகமாக ஓடி வந்தது.
வழிப்போக்கன் திருடர்களோடு போராடினான்.
பெண் பாட்டுப் பாடினாள்.

10. பன்மை எழுவாய்களை ஒருமை எழுவாய்களாக மாற்றி அமைத்துச் சொல்:

(1) பிள்ளைகள் ஓடினார்கள்.
(2) திருடர்கள் தாக்கினார்கள்.
(3) பசுக்கள் இருந்தன.

# 10. பயிர்த்தொழில்–I

நாகன் : ஜான், இன்று கொல்லை வெளிக்குப் போவோமா? அதோ, இஸ்மேல் வருகிறான். அவனும் வருவான்.

ஜான் : நானும் கொல்லை வெளியைப் பார்த்துப் பலநாள்கள் ஆயின. வா, போவோம்.

நாகன் : இதோ கொல்லைவெளி. இவை புன்செய் நிலங்கள். இவ்வூரில் புழுதிப் பயிரே செய்வார்கள். முதலில் நிலத்தை உழுவார்கள். பிறகு விதை விதைப்பார்கள். பயிர் வளர்ந்ததும் களை வெட்டுவார்கள். வளர்ந்த பயிரைக் காவல் காக்க வேண்டும். அதோ சோளப் பயிரும் கம்புப் பயிரும் கதிர் முற்றி இருக்கின்றன.

இஸ்மேல்: சோளமும் கம்பும் உயரமாக வளர்ந்து இருக்கின்றன. கம்பங்கதிர் நீளமானது. சோளக் கதிர் குட்டையானது.

ஜான் : அந்தப் பரணின்மேல் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள், பார். அவர்கள் காவல் செய்கிறார்கள். அவர்கள் குருவி ஓட்டுகிறார்கள். அவர்கள் கையில் கவண் வைத்திருக்கிறார்கள்.

நாகன் : சோளத்தையும் கம்பையும் முதலில் கதிரை அறுப்பார்கள். கதிரை உலர்த்தி மாட்டை விட்டு மிதிக்கச் செய்வார்கள். பிறகு தூற்றி மணியை வேறு பிரிப்பார்கள். பிறகு அடித் தண்டை அறுப்பார்கள். அது மாட்டுக்குத் தீனியாகும். அதோ துவரையும் எள்ளும் காய்த்து இருக்கின்றன. துவரைச் செடி பெரியது; எள்ளுச் செடி சிறியது. துவரைச் செடியை அடியோடு அறுப்பார்கள். அதை வெயிலில் உலர்த்திப் பாறை

யிலோ பலகையிலோ அடிப்பார்கள். காய்பிளந்து மணிகள் உதிரும். பிறகு மணிகளைத் தூற்றி எடுப்பார்கள். எள்ளுச் செடியை வேரோடு பிடுங்கி வெயிலில் உலர்த்துவார்கள். பிறகு அதை மாட்டைக் கொண்டு மிதிக்கச் செய்து தூற்றி எடுப்பார்கள். எள்ளுச் செடியும் துவரஞ் செடியும் அடுப்பு எரிக்க உதவும்.

இஸ்மேல்: அதோ பாருங்கள். உளுந்து, பயறு, மொச்சை, காராமணி, கொள்ளு இவை சடைசடையாய்க் காய்த்து இருக்கின்றன. அவை யாவும் கொடிப் பயிர்கள். மொச்சைக்காய் தட்டையானது. காராமணிக்காய் திரட்சியானது. உளுத்தங்காய் பருமனாக இருக்கும். பயற்றங்காய் சிறுத்து இருக்கும். பயற்றங்காய் நேராக இருக்கும். கொள்ளுக்காய் வளைவாக இருக்கும். உளுந்து கருமை நிறமானது. பயறு பச்சை நிறமானது.

நாகன்: கொடிப்பயிர்களை வேரோடு பிடிங்கி வெயிலில் உலர்த்துவார்கள். உலர்ந்த பிறகு மாட்டை விட்டு மிதிக்கச் செய்வார்கள். காய்கள் வெடித்து மணி உதிரும். அவற்றைத் தூற்றி எடுப்பார்கள். இதோ வேர்க்கடலைப் பயிர் இருக்கிறது. வேர்க்கடலையும் கொடிப்பயிர் ஆகும். வேர்க்கடலை வேரில் காய்க்கும். காய் மண்ணில் மறைந்து இருக்கும். காய் முற்றியதும் கொடியை வெட்டி எடுப்பார்கள். காயைப் பறித்து எடுத்துக் கொள்வார்கள். வேர்க்கடலைக் கொடியை மாடு தின்னும்.

ஜான்: கொல்லை வெளியைப் பார்த்தாகி விட்டது. இன்னும் பொழுது இருக்கிறது. வயல் வெளியையும் பார்த்து வருவோம் வாருங்கள்.

| | | |
|---|---|---|
| கொல்லைவெளி | கவண் | வளைவு |
| புழுதிப்பயிர் | மிதி | கொடிப்பயிர் |
| களை | தூற்று | உதிரும் |
| உயரமாக | சடைசடையாய் | மறைந்து |
| நீளம் | நேராக | வெட்டி |
| குட்டை | பருமன் | பறித்து |
| பரண் | அடியோடு | திரட்சி |

## கேள்விகள்

1. புன்செய் நிலத்தில் எவ்வகைப் பயிர் செய்வர்?
2. கதிரில் கம்பிற்கும் சோளத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?
3. பரண்மீது இருக்கும் பெண்கள் என்ன செய்கிறார்கள்?
4. அறுவடைசெய்வதில் துவரை, எள்ளு, சோளம், கம்பு இவைகளுக்குள்ள வித்தியாசம் என்ன?
5. வேர்க்கடலை எங்கு காய்க்கும்? அதனை எவ்வாறு சேகரிப்பர்?

## பயிற்சி

1. உங்கள் ஊர்ப் புன்செய் நிலங்களைப் போய்ப் பார்?
2. உங்கள் ஊரில் பயிராகும் புன்செய்ப் பயிர்களைச் சொல்.
3. எதிர்ச் சொற்கள் கூறு:—புன்செய், உயரம், குட்டை, நேராக, பருமன், பெரியது.
4. சடைசடையாய்—இது இரட்டைச் சொல். கொத்துக்கொத்தாக, குலைகுலையாக, அடுக்கடுக்காக, சாரிசாரியாக, வரிசைவரிசையாக — இவற்றைப் பொருத்தமாக வாக்கியங்களில் வைத்துச் சொல்.
5. புழுதிப்பயிர், உயரமாக, கொடிப்பயிர், துவரை, பருமனாக, சிறுமனாக—கீழே கோடிட்ட இடங்களில் இவற்றைப் பொருத்தமாக வைத்து வாசி:

புன்செய் நிலத்தில் —— செய்வார்கள்.

உளுத்தங்காய் —— இருக்கும்.

வேர்க்கடலை —— ஆகும்.

சோளப்பயிர் —— வளரும்.

—— செடிப்பயிர் ஆகும்.

பயற்றங்காய் —— இருக்கும்.

6. சோளப்பயிர்; சோளம் + பயிர்—இவ்வாறே கீழே தரப்பட்டுள்ளவற்றைப் பிரித்து எழுது.

கம்பங்கதிர், உளுத்தங்காய், பயற்றங்காய், வேர்க்கடலை.

7. செல்வன்—இது ஆணைக் குறிக்கிறது. இவ்வாறு ஆணைக் குறிக்கும் சொல் ஆண்பால் எனப்படும்.

செல்வி—இது பெண்ணைக் குறிக்கிறது. இவ்வாறு பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பால் எனப்படும்.

8. ஆண்பால் சொல்லுக்குப் பெண்பால் சொல்லும் பெண்பால் சொல்லுக்கு ஆண்பால் சொல்லும் கூறு:

திருடன், கள்ளன், மனைவி, பிச்சைக்காரன், பெண், மகள், தந்தை, மாமன், பசு.

9. பன்மை எழுவாய்களை ஒருமை எழுவாய்களாக மாற்றி அமைத்து வாசி:

திருடர்கள் செல்வனைக் கண்டார்கள்.

பெண்கள் குருவி ஓட்டுகிறார்கள்.

கதிர்கள் முற்றியிருக்கின்றன.

10. கொல்லை, கொள்ளை, சோளம், சோழர்—இவற்றை உச்சரித்துப் பழகு.

11. கீழ்வரும் வாக்கியங்களை ஒரே வாக்கியமாகச் சேர்த்துச் சொல்:

அவ்வழியே ஒரு சாமியார் சென்றார். அவர் அச்செல்வனைக் கண்டார்.



# 11. பயிர்த்தொழில்–II

**நாகன் :** இந்த வயல்வெளியைப் பாருங்கள். இவை நன்செய் நிலங்கள். நன்செய் நிலத்தில் பெரும்பாலும் சேற்றுப் பயிரே செய்வார்கள். இதோ உழவன் நிலத்தை உழுகின்முன். அவன் பாட்டுப் பாடிக்கொண்டே உழுகின்முன். எருதுகள் பாட்டைக் கேட்டுக்கொண்டே நடக்கின்றன. அவன் மனைவி கூடையில் எரு எடுத்துவந்து கொட்டுகிருள். கிழவன் எருவைத் தூவி இறைக்கிருன். அவனுக்குப் பின்னுல் ஒரு சிறுவன் நிலத்தைச் சமப்படுத்துகிருன்.

**இஸ்மேல் :** இந்த நிலத்தை உழுது சமப்படுத்தி இருக்கிருர்கள். இதில் ஒருவன் விதை விதைக்கிருன். அவன் என்ன அழகாக விதைக்கிருன், பாருங்கள்! அந்த நிலத்தின் ஒரு மூலையில் மாத்திரம் விதை விதைக்கிருனே, ஏன்?

**நாகன் :** அவன் நாற்று விடுகிறான். சில நிலங்களில் விதைப்பார்கள் ; சில நிலங்களில் நாற்றுவிட்டு நடுவார்கள்.

**ஜான் :** ஆம், அதோ பாருங்கள். சிலர் நாற்றுப் பறிக்கிறார்கள். அவர்கள் நாற்றைக் கட்டுக் கட்டாகக் கட்டி வைக்கிறார்கள். அந்த நிலத்தில் பலர் நாற்று நடுகிறார்கள். ஆண்களும் பெண்களும் கலந்து நடுவதைப் பாருங்கள். அது உழுது சமப்படுத்தப்பட்ட நிலம்.

**இஸ்மேல் :** பயிர் நிலங்களுக்கு நாள்தோறும் நீர் பாய்ச்சவேண்டுமே ; இந்த நிலங்களுக்கு எங்கிருந்து நீர் பாய்ச்சுகிறார்கள் ?

**நாகன் :** நேற்று வரையில் ஏரியிலிருந்து நீர் பாய்ச்சி வந்தார்கள். ஏரியிலிருந்து நீர் வாய்க்



கால் வழியாக வந்து பாயும். நேற்றோடு ஏரியில் நீர் வற்றிவிட்டது. இன்று கிணற்றிலிருந்து இறைத்துப் பாய்ச்சுகிறார்கள். அந்தக் கிணற்றில் மூவர்

ஏற்றம் இறைக்கிறார்கள். ஒருவன் கபிலை ஓட்டுகிறான். இரண்டு எருதுகள் கபிலையை இழுக்கின்றன. அதோ ஒருவன் நீர் பாய்ச்சுகிறான், பாருங்கள்.

ஜான் : ஆம். ஏற்றம் இறைப்பவன் பாட்டுப் பாடுகிறான். அவன் பாட்டு இனிமையாக இருக்கிறது. இந்தக் கிணறு சதுரமாக இருக்கிறதே! நம் தோட்டக் கிணறு வட்டமாக அல்லவா இருக்கிறது?

இஸ்மேல் : அந்த நிலத்தில் ஜனங்கள் கூட்டமாக என்ன செய்கிறார்கள்?

நாகன் : அவர்கள் களை எடுக்கிறார்கள். பயிரோடு புல் பூண்டுகளும் முளைத்து வளரும். அவற்றைக் களை என்பார்கள். களை வளர்ந்தால் பயிர் வளராது. அதனால் களைகளைப் பறித்து எடுப்பார்கள். அதற்குக் களை எடுத்தல் என்பது பெயர்.

ஜான் : இந்த நிலத்தில் பயிர் உயரமாக வளர்ந்து இருக்கிறது. கதிர்கள் நீளமாக இருக்கின்றன. கதிரில் நெல் மணிகள் உள்ளன. கதிர்கள் காற்றில் அசைவது எவ்வளவு அழகாக இருக்கிறது, பாருங்கள்!

இஸ்மேல் : இந்த நிலத்தில் பயிர் சாய்ந்து மடிந்து கிடக்கின்றதே!

நாகன் : அந்த நிலத்தில் பயிர் முற்றவில்லை. அதனால் அது நேராக நிமிர்ந்து நிற்கிறது. இந்தப் பயிர் நன்றாக முற்றி விளைந்துவிட்டது. அதனால் இந்தப் பயிர் சாய்ந்து கிடக்கிறது. இது கதிர் முற்றிவிட்டதால் அறுவடை செய்கிறார்கள். பயிரை அறுத்து அரி அரியாக வைக்கிறார்கள். சிலர் அரிகளைக் கட்டுக் கட்டாகக் கட்டுகிறார்கள்.

பலர் கட்டுகளைக் களத்தில் கொண்டு சேர்க்கிறார்கள்.

ஜான் : இதோ இருவர் கட்டு அடிக்கிறார்கள், பாருங்கள். இரு பெண்கள் கட்டை அவிழ்த்து அரி எடுத்துக் கொடுக்கிறார்கள். இவர்கள் எவ்வளவு ஒற்றுமையாக வேலை செய்கிறார்கள்!

நாகன் : அந்தப் பக்கத்தில் பாருங்கள். அடிக்கப்பட்ட தாள்களைப் பரப்பித் தாம்பு அடிக்கிறார்கள். ஒருவன் தாளை உதறுகிறான். ஒரு பெண் நெல்லைப் பெருக்கிக் குவிக்கிறாள். இருவர் நெல்லைத் தூற்றுகிறார்கள். அவர்கள் பிறகு நெல்லை அளந்து மூட்டைகளில் கட்டுவார்கள். மூட்டைகளை வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு போவார்கள். நாம் நெல்லைக் குற்றிச் சமைத்துச் சாப்பிடுகிறோம்.

இஸ்மேல் : தாளை என்ன செய்வார்கள்?

நாகன் : தாளை உலர்த்திச் சுமைகளாகக் கட்டுவார்கள். சுமைகளை எடுத்துச் சென்று போராகப் போடுவார்கள். அது வைக்கோல் எனப்படும். அதுவே மாட்டின் முக்கிய ஆகாரம் ஆகும்.

ஜான் : நன்செய் நிலத்தில் நெற்பயிரே தான் செய்வார்களா?

நாகன் : நன்செய் நிலத்தில் பெரும்பாலும் நெற்பயிர் தான் செய்வார்கள். சில இடங்களில் கரும்புப் பயிரும் செய்வது உண்டு. சோளம், கம்பு முதலியவை புன்செய்ப் பயிர்கள். நன்செய் நிலங்களிலும் புன்செய் நிலங்களிலும் பயிர் செய்யும் தொழிலுக்குப் பயிர்த்தொழில் என்பது பெயர். அதை உழவு, விவசாயம் என்றும் சொல்வது

உண்டு. அத்தொழில் செய்பவர்கள் விவசாயிகள். அவர்களுக்கு உழவர், குடியானவர், வேளாளர் என்னும் பெயர்களும் உண்டு.

"உழவுத் தொழிலே உயர்ந்த தொழில்."

| | | |
|---|---|---|
| வயல்வெளி | வற்றி | ஒற்றுமை |
| நன்செய் | வட்டமாக | பரப்பி |
| பெரும்பாலும் | பூண்டு | தாள் |
| தூவி | அழகாக | போர் |
| சமப்படுத்து | சாய்ந்து | விவசாயம் |
| நாள்தோறும் | மடிந்து | விவசாயி |
| பாய்ச்சி | அரிஅரியாக | தாம்படித்தல் |

## கேள்விகள்

1. நன்செய் நிலத்தில் எவ்வகை பயிர் செய்வர்?
2. நிலங்களுக்கு நீர் எவ்வாறு பாய்ச்சப்படுகிறது?
3. களை என்று எவைகளுக்குப் பெயர்?
4. களைகளால் பயிர்களுக்கு ஏற்படுவது என்ன?
5. பயிர்த்தொழிலுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

## பயிற்சி

1. உங்கள் ஊரிலுள்ள வயல்வெளியைப் போய்ப் பார்.
2. உங்கள் ஊரில் வயல்களுக்கு நீர் எப்படிப் பாய்ச்சுகிறார்கள், சொல்.
3. உங்கள் ஊரில் பயிராகும் நன்செய்ப் பயிர்களைச் சொல்.
4. நன்செய்ப் பயிர் செய்யும் முறைகளைத் தெரிந்து கொள்.
5. எதிர்ச் சொற்கள் கூறு: வட்டம், சாய்ந்து, ஒற்றுமை, பின்னால்.
6. அரிஅரியாக, கட்டுக் கட்டாக—இவற்றைக் குறித்துக்கொள். இவற்றை வைத்து வாக்கியங்கள் சொல்.
7. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள ஆண்பால் சொற்களைப் பெண்பால் சொற்களாக மாற்றி அமைத்து வாசி:

உழவன் நிலத்தை உழுகிறான்.
கிழவன் எருவைத் தூவி இறைக்கிறான்.

சிறுவன் நிலத்தைச் சமப்படுத்துகிறன்.
ஒருவன் விதை விதைக்கிறன்.

8. இவை நன்செய் நிலங்கள். இதில் பயனிலை எது? அது என்ன பயனிலை.

9. கீழ்வரும் வாக்கியங்களை 'உண்டு' என்பதற்குப் பதிலாக 'இல்லை' என்னும் பொருள்பட மாற்றிச் சொல்:

நன்செய் நிலத்தில் நெற்பயிர் செய்வது உண்டு.
சில நிலங்களில் நாற்று நடுவது உண்டு.
ஏரியில் நீர் இல்லாத காலத்தில் கிணற்றிலிருந்து நீரை இறைத்துப் பாய்ச்சுவது உண்டு.

10. கீழே கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து வாசி:

நன்செய் நிலத்தில் —— பயிரே செய்வர்.
ஏரி நீர் ——— வழியாக வந்து பாயும்.
ஏற்றப்பாட்டு ——— இருக்கிறது.
கதிர் ——— அறுவடை செய்கிறர்கள்.
——— மாட்டின் முக்கிய ஆகாரம் ஆகும்.
விவசாயத் தொழில் செய்பவர்கள் ———.

11. கீழ்வரும் வாக்கியங்களை ஒரு வாக்கியமாகச் சேர்த்துச் சொல்:

(1) பயிர் முற்றவில்லை. அதனுல் அது நிமிர்ந்து நிற்கிறது.
(2) பயிர் முற்றி விளைந்துவிட்டது. அதனுல் அது சாய்ந்து கிடக்கிறது.

12. உழவு—இதனைக் குறிக்கும் வேறு சொல் ஒன்று சொல்.

13. உழவர்—இவர்களைக் குறிக்கும் வேறு மூன்று சொற்கள் சொல்.

14. இறை—இரை, பறி—பரி: இவற்றைப் பொருள் வேறுபாடு தோன்ற உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

15. பிரித்து எழுது: தோட்டக் கிணறு, நெற்பயிர், சேற்றுப் பயிர்.

16. பயிர்த்தொழிலைப் பற்றிய பழமொழி ஒன்று சொல்.



## 12. பாரதியார்

நீங்கள் பாப்பாப் பாட்டுப் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அதைப் பாடினவர் யார் தெரியுமா? அதைப் பாடினவர் பாரதியார். பாரதியார் ஒரு தமிழ்க் கவிஞர். அவர் இளஞ்சிறுவர் முதல் பெரும் புலவர் வரையில் எல்லோரும் படிக்கத்தக்க சிறந்த தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். நீங்கள் அவர் பெயரைக் கேட்டிருப்பீர்கள்; அவர் உருவத்தைப் படத்தில் பார்த்திருப்பீர்கள். ஆனால் அவர் வரலாறு உங்களுக்குத் தெரியாது. அதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

பாரதியாரின் முழுப் பெயர் சுப்பிரமணிய பாரதியார் என்பது. அவர் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள எட்டையபுரம் என்னும் ஊரில் எழுபது வருஷங்களுக்கு முன் பிறந்தார். அவர் தந்தையார் சின்னசாமி ஐயர்; தாயார் பெயர் இலக்ஷ்மி அம்மாள். இவரது ஐந்தாவது வயதில் இவர் தாயார் இறந்து போனார். அதுமுதல் தந்தையாரே இவரை அன்போடு வளர்த்து வந்தார். தந்தையார் இவரைத் தக்க பருவத்தில் உள்ளூர்ப் பாடசாலையில் சேர்த்துப் படிக்க வைத்தார். ஆரம்பப் படிப்பு முடிந்ததும் இவர் திருநெல்வேலியில் உள்ள இந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார்.

பாரதியார் கலாசாலையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் கற்றார். ஆனால் ஆங்கில பாஷையில் இவர் மனம் செல்லவில்லை. இவர் தமிழ் மொழியையே அதிகமாக விரும்பிப் பயின்றார். தந்தையாரிடமே இவர் பல தமிழ் நூல்களைப் பாடம் கேட்டார். இவர் சிறு வயதில் யாரோடும் அதிகமாகப் பழகமாட்டார்; அயல் பிள்ளைகளோடு சேரமாட்டார்; எப்பொழுதும் தனிமையாகவே இருப்பார்; யாரும் இல்லாத தனியிடத்தில் இருந்து படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பார். இவர் ஏழு எட்டு வயதிலேயே தமிழ்க் கவிகள் பாடத் தொடங்கினார்; அயலார் பாடல்களுக்கு எளிதில் பொருள் சொல்லியும் வந்தார். இவர் திறமையைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். பன்னிரண்டாவது வயதில் புலவர்கள் இவருக்குப் 'பாரதி' என்ற பட்டம் சூட்டினர். அதுமுதல் எல்லோரும் இவரைப் 'பாரதி' என்றே அழைக்கலாயினர்.

பாரதியாருக்குப் பதினைந்தாவது வயதில் திருமணம் நடந்தது. இவர் தந்தையார் கடயம் செல்லப்ப ஐயர் மகளான செல்லம்மாள் என்பவரை இவருக்கு மணம் செய்து வைத்தார். மணம் முடிந்த உடனே இவர் தந்தையாரும் இறந்தார். தந்தையார் இவருக்குச் சிறிதும் பொருள் தேடி வைக்கவில்லை. இவரை ஆதரிக்கக்கூடிய உற்றார் உறவினரும் யாரும் இல்லை. அதனால் இவர் மிகவும் வருத்தப்பட்டார். இவர் வருத்தத்தை அறிந்த இவருடைய அத்தையார் இவரைத் தம்மோடு காசிக்கு அழைத்துச் சென்றார். பாரதியார் காசியில் சில வருஷங்கள் இருந்தார். இவர் அங்கு இந்தி, சமஸ்கிருதம் ஆகிய பாஷைகளைக் கற்றார். இவருக்கு காசி வாழ்க்கையிலும் வெறுப்பு உண்டாகியது. இவர் மறுபடியும் எட்டையபுரத்திற்கு வந்தார். எட்டையபுர அரசர் இவர் பெருமையை அறிந்து, இவரைத் தம் அவைப் புலவராக அமர்த்திக் கொண்டார்; பொன்னும் பொருளும் கொடுத்து இவரை அன்போடு ஆதரித்தார். இவர் இனிமையான தமிழ்க் கவிகளைப் பாடி அரசரை மகிழ்வித்து வந்தார். சில வருஷங்கள் சென்றன. இவருக்கும் அரசருக்கும் மனவேறுபாடு உண்டாகியது. இவருக்கு அரசரோடு பழக விருப்பம் இல்லை. ஆகவே இவர் எட்டையபுரத்தை விட்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

பாரதியார் மதுரையில் சிறிது காலம் தமிழாசிரியராக இருந்தார். அந்த வேலையும் இவருக்குப் பிடிக்கவில்லை. பிறகு இவர் சென்னைக்கு வந்து சேர்ந்தார் சென்னையில் இவர் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியராகச் சில வருஷங்

கள் வேலை செய்தார். இவர் அங்கு உத்தியோகத்தோடு தேச சேவையிலும் ஈடுபட்டார்; 'இந்தியா,' 'பால பாரதம்' என்னும் பத்திரிகைகளைத் தாமே ஆரம்பித்து நடத்தினார். அரசாங்கம் அடக்கு முறையை ஆரம்பிக்கவே இவர் பத்திரிகை நின்று போயிற்று. அரசாங்கத்தார் இவரையும் சிறை செய்வதாக இருந்தனர். எனவே இவர் சென்னையை விட்டுப் புதுச்சேரிக்குச் சென்றார்.

பாரதியார் புதுச்சேரியில் பத்து வருஷங்கள் தங்கியிருந்தார். அந்தப் பத்து வருஷ காலமும் இவர் அங்குப் பட்ட கஷ்டங்களுக்கு அளவே இல்லை. அறிமுகம் இல்லாத ஊரில் இவர் ஆதரவு இன்றிக் கஷ்டப்பட்டார். உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாமல் இவர் மனைவி மக்களோடு வருந்தினார். ஆனால் பாரதியார் அக் கஷ்டங்களைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. இவர் இத்துன்பங்களை இன்பமாகவே கருதினார்; எப்பொழுதும் சந்தோஷமாகவே இருந்தார். அந்தக் காலத்தில்தான் இவர் அதிகமான பாடல்களைப் பாடினார். இவர் அனுபவித்த துன்பங்கள் எல்லாம் இன்பப் பாடல்களாக வெளிப்பட்டன.

பத்து வருஷங்களுக்குப் பிறகு பாரதியார் புதுச்சேரியிலிருந்து வெளிவந்தார். இவர் மறுபடியும் சென்னையை அடைந்து 'சுதேசமித்திரனில்' உதவி ஆசிரியராக அமர்ந்தார். பழைய படியே பல தேசீயப் பாடல்கள் பாடியும், கட்டுரைகள் எழுதியும் மக்களின் தேசபக்தியைத் தூண்டி வந்தார். ஆனால் இவர் அதிக காலம் உயிரோடு இருக்கவில்லை. நாளுக்கு நாள் இவருடைய உடல் மெலிந்து வந்தது. வறுமை நோயோடு உடல்

நோயும் சேர்ந்தது. கடைசியாக இவர் தமது முப்பத்தொன்பதாவது வயதில் இவ்வுலக வாழ்க்கையை விட்டு மறைந்தார்.

பாரதியார் உடல் மறைந்தது. ஆனால் இவர் பாடல்கள் இன்றும் மறையாமல் இருக்கின்றன! அவை என்றும் மறையாமல் இருக்கும். நாம் அவற்றைப் படித்துப் பயன் அடையவேண்டும்.

| | | |
|---|---|---|
| கவிஞர் | புலவர் | மகிழ்வி |
| வரலாறு | பாரதி | வேறுபாடு |
| பருவம் | பட்டம் | அறிமுகம் |
| கலாசாலை | சூட்டு | பொருட்படுத்தல் |
| மொழி | மணம் | அடைந்து |
| திறமை | உற்றார் | தூண்டி |
| ஆச்சரியம் | அமர்த்தி | கட்டுரைகள் |

## கேள்விகள்

1. பாரதியாரின் பெற்றோர்கள் யார்?
2. பாரதியாருக்குப் "பாரதி" என்ற பட்டம் எப்படிக் கிடைத்தது?
3. பாரதியார் புதுச்சேரிக்குச் செல்லக் காரணம் என்ன?
4. பாரதியார் மக்களிடம் எவ்வாறு தேசபக்தியைத் தூண்டினார்?
5. பாரதியாரின் பாடல்கள் என்றும் மறையாமல் இருக்க நாம் என்ன செய்யவேண்டும்?

## பயிற்சி

1. உனக்குத் தெரிந்த பாரதியார் பாடல்களைச் சொல்.
2. உங்கள் பாடசாலையில் நடந்த பாரதி திருநாளைப் பற்றிச் சொல்.

3. பாரதியார் எழுதின வசன நூல்களை வாங்கி வாசி.

4. பாரதியார் காசி வாழ்க்கையைப் பற்றிச் சொல்.

5. பாரதியார் புதுச்சேரி வாழ்க்கையைப் பற்றிச் சொல்.

6. வரலாறு, வேறுபாடு, அறிமுகம், அடக்குமுறை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

7. பாஷை—மொழி, வருஷம்—ஆண்டு, இவ்வாறே இப்பாடத்தில் வந்துள்ள சமஸ்கிருதச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் கூறு.

8. மணம்—கல்யாணம், வாசனை—இவ்வாறு வரும் இருபொருட் சொற்களைக் குறித்துக்கொள்.

9. பருவம், வறுமை—இவற்றிற்குப் பொருள் சொல்.

10. அவன் நாற்று விடுகிறான்.

இவை நன்செய் நிலங்கள்.

இவ்வாக்கியங்களில் அவன் என்பது ஒரு மனிதனையும், இவை என்பது நிலங்களையும் சுட்டுகின்றன. அவற்றுள், ‘அவன்’ என்பதில் உள்ள அ என்னும் எழுத்தும், ‘இவை’ என்பதில் உள்ள இ என்னும் எழுத்துமே சுட்டுப் பொருளைத் தந்து நிற்கின்றன. ஆகவே அவ்வெழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

அ, இ, உ—இம்மூன்றும் சுட்டுப்பொருளைத் தரும் எழுத்துக்கள் ஆகும். இவை சுட்டுப்பொருளைத் தந்து நிற்கும்போது சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

இவற்றுள் அ என்பது தூரத்தில் உள்ளதைச் சுட்டும்.

இ என்பது சமீபத்தில் உள்ளதைச் சுட்டும்.

உ என்பது இப்பொழுது வழக்கத்தில் இல்லை.



## 13. நல்ல வார்த்தை

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!
பிள்ளைகள் பெற்றந்தப் பூனை—அவை
பேருக்கு ஒரு நிறமாகும்.

சாம்பல் நிறத்தொரு குட்டி—கருஞ்
சாந்து நிறம்ஒரு குட்டி
பாம்பு நிறம்ஒரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறம்ஒரு குட்டி.

எந்த நிறம்இருந்தாலும்—அவை
யாவும் ஒரேதரம் அன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்—இது
ஏற்றம் என்றும் சொல்லலாமோ?

**வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்**
**மானிடர் வேற்றுமை இல்லை.**
**எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு**
**யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.**

*—பாரதியார்*

**பயிற்சி**

1. கீழ்வரும் வாக்கியங்களை 'இல்லை' என்பதற்குப் பதிலாக 'உண்டு' என்று பொருள்படும்படி மாற்றி வாசி :

*பாரதியாருக்கு உற்ருர் உறவினர் யாரும் இல்லை.*
*பாரதியாருக்கு அரசரோடு பழக விருப்பம் இல்லை.*
*பாரதியார் அதிக காலம் உயிரோடு இருக்கவில்லை.*
*களை வளர்ந்தால் பயிர் வளராது.*

2. கீழ்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றையும் இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து வாசி :

*அரசாங்கம் அடக்குமுறையை ஆரம்பிக்கவே பாரதியார் பத்திரிகை நின்றது.*

*பாரதியார் மறுபடியும் சென்னையை அடைந்து சுதேசமித்திரனில் ஆசிரியராக அமர்ந்தார்.*

3. எதிர்ச்சொற்கள் கூறு : துன்பம், கஷ்டம், வெறுப்பு, நல்லது, ஏற்றம்.

4. அரசர், ஆங்கிலம்—அரசர் என்பதில் உள்ள அ குறுகி ஒலிக்கிறது. ஆங்கிலம் என்பதில் உள்ள ஆ நீண்டு ஒலிக்கிறது. இப்படியே உயிரெழுத்துக்களில் குறுகி ஒலிக்கும் எழுத்துகளும், நீண்டு ஒலிக்கும் எழுத்துகளும் உள்ளன. குறுகி ஒலிக்கும் எழுத்துகள் குறில் அல்லது குற்றெழுத்துக்கள் எனப்படும். நீண்டு ஒலிக்கும் எழுத்துகள் நெடில் அல்லது நெட்டெழுத்துகள் எனப்படும்.

அ, இ, உ, எ, ஒ—இவை ஐந்தும் குறுகி ஒலிக்கும் எழுத்துகள். இவை குற்றெழுத்துகள்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இவை ஏழும் நீண்டு ஒலிக்கும் எழுத்துகள். இவை நெட்டெழுத்துகள் எனப்படும்.



## 14. கடிதம் எழுதுதல்

**மகன்:** அப்பா, அண்ணா நவராத்திரி விடு முறைக்கு இங்கு வரப்போவதாகக் கடிதம் எழுதி யிருக்கிறார் அல்லவா? அண்ணா வருவதற்குள் நான் அவருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும். எப்படி எழுதுவது என்பதைச் சொல்லுங்கள், அப்பா.

**தந்தை:** காகிதமும் பென்சிலும் எடுத்துக் கொண்டுவா, சொல்லுகிறேன்.

**மகன்:** இதோ கொண்டு வந்திருக்கிறேன், அப்பா. கடிதத்தை எப்படி ஆரம்பிக்க வேண்டும்?

**தந்தை:** கடிதத்தைப் பார்த்ததும் அது எங்கிருந்து வந்திருக்கிறது என்பதும், யாரிட மிருந்து வந்திருக்கிறது என்பதும் எப்பொழுது எழுதப்பட்டது என்பதும் தெரியவேண்டும் அல் லவா? அதற்காக முதலில் காகிதத்தின் மேல்

பாகத்தில் வலப்பக்கமாக அனுப்புவோரது விலா சத்தையும், அதன் கீழ் அனுப்பப்படும் தேதியையும் எழுதவேண்டும்.

**மகன் :** இதோ எழுதியிருக்கிறேன், பாருங்கள். இப்படித்தானே எழுத வேண்டும்?

20, கடை வீதி,
ஈரோடு,
12-9-1951.

**தந்தை :** ஆம். இதன் பின் விலாசத்திற்குக் கீழ் இடப் பக்கமாகத் தொடங்கி நீ யாருக்கு எழுதுகிறாயோ அவரைக் குறிக்க வேண்டும். இது எழுதுபவருக்கும் எழுதப்படுபவருக்கும் உள்ள உறவு, நட்பு போன்ற தொடர்புக்கு ஏற்றபடி வேறுபடும்.

**மகன் :** அண்ணாவை எப்படிக் குறிக்கலாம், அப்பா ?

**தந்தை :** **அன்புள்ள அண்ணா என்று குறிக்கலாம்.**

**மகன் :** அப்படியே குறித்துக் கொண்டேன். பிறகு என்ன செய்ய வேண்டும் ?

**தந்தை :** அதன் பிறகு நீ விரும்பும் சமாசாரத்தை எழுத வேண்டும். அது கோவையாகவும், நேரில் பேசுவது போலவும் இருக்க வேண்டும்.

**மகன் !** அவ்வளவு தானே ! இன்னும் ஏதாவது இருக்கிறதா ?

**தந்தை :** செய்தியின் கீழ் வலப்பக்கத்தில் நமக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பைக் குறித்து, அதனடியில் கையெழுத்து இடவேண்டும்.

**மகன் :** நான் அண்ணாவுக்கு எழுதும் கடிதத்தில் என்னவென்று குறித்துக் கையெழுத்து இட வேண்டும் ?

**தந்தை :** உங்கள் அன்புள்ள தம்பி என்று குறித்துக் கையெழுத்து இடலாம்.

**மகன் :** அப்பா, நீங்கள் சொன்னவைகளைக் கவனத்தில் வைத்துக்கொண்டு நான் அண்ணு வுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொண்டு வரட்டுமா?

**தந்தை :** எழுதிக்கொண்டுவா, பார்ப்போம்.

**மகன் :** அப்பா, இதோ பாருங்கள், நான் எழுதிய கடிதம். சரியாக இருக்கிறதா என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள்.

15, கடை வீதி,
ஈரோடு,
12–9–1951.

அன்புள்ள அண்ணு,

நீங்கள் அப்பாவுக்கு எழுதிய கடிதம் கிடைத்தது. உங்கள் நலம் அறிந்து மகிழ்ந்தோம். நீங்கள் நவராத்திரி விடுமுறைக்கு இங்கு வருவதாக எழுதியிருக்கிறீர்கள். உங்களைப் பார்க்க நாங்கள் எல்லோரும் ஆவலாய் இருக்கிறோம். நீங்கள் வரும் பொழுது எனக்கு ஒரு குடையும், தம்பிக்கு ஒரு குல்லாவும் வாங்கி வரவும். அம்மா மறவாமல் பெருங்காயம் வாங்கிவரும்படி எழுதச் சொன்னுள்

நீங்கள் வரும் நாளையும் நேரத்தையும் தெரிவித்தால், அப்பாவும் நானும் ஸ்டேஷனில் வந்திருப்போம்.

உங்கள் அன்புள்ள தம்பி,
அர்த்தநாரி.

**தந்தை :** நன்ருய் எழுதியிருக்கிருயே!

**மகன் :** இனி இதை என்ன செய்யவேண்டும் அப்பா?

**தந்தை :** இதை ஓர் உறைக்குள் இட்டு மூடி ஒட்ட வேண்டும். பிறகு உறையின் பின்புறத்தில் உன் அண்ணன் விலாசத்தை எழுத வேண்டும். அதன்பின் தபால் கட்டணத்திற்காக இரண்டணுத் தபால் முத்திரை வாங்கி உறையின் மேல்பாகத்தில் வலப்பக்கத்து மூலையில் ஒட்டவேண்டும். மேஜையில் உறையும் இரண்டணு முத்திரையும் வைத்திருக்கிறேன். போய்க் கடிதத்தை உறையில் இட்டு ஒட்டி விலாசம் எழுதிக் கொண்டுவா. உனக்கு அண்ணன் விலாசம் தெரியுமா? இந்தக்கடிதத்தில் இருக்கிறது, பார்.

**மகன் :** இதோ பாருங்கள், அப்பா.

**திரு. மணிவண்ணன்,**
6, பரோடா தெரு,
தியாகராயநகர்,
சென்னை-17

**தந்தை :** சரியாக எழுதியிருக்கிருய். இனி இதைத் தபால் பெட்டியில் போட வேண்டும். அடுத்த இரவில் இது சென்னைக்கு அனுப்பப்படும். நாளை காலை இது சென்னைக்குப் போய்ச் சேரும். அங்குத் தபால்காரர் இதை உன் அண்ணன் வீட்டில் கொண்டுபோய்க் கொடுப்பார். உன் அண்ணனைப் போல நீ சென்னையில் படித்துக் கொண்டிருக்கிருய் என்று வைத்துக்கொள். உன் தம்பி உனக்கு இம்மாதிரி கடிதம் எழுதினுல், நீ அவனுக்கு எப்படிப் பதில் எழுதுவாய்? எழுதிக் கொண்டுவா, பார்ப்போம்.

**மகன் :** இதோ எழுதியிருக்கிறேன், பாருங்கள்.

6, பரோடா தெரு,
தியாகராய நகர்,
சென்னை–17.
20–9–1951.

அன்புள்ள தம்பி,

உன் கடிதம் கிடைத்தது. உங்கள் நலம் அறிந்து மகிழ்ந்தேன். நானும் உங்களைப் பார்க்க ஆவலாய் இருக்கிறேன். நான் முதல் தேதி அன்று இரவு புறப்படும் 'ப்ளூ மவுண்டன்' இரயிலில் வருவேன். வரும்போது உனக்குக் குடையும், தம்பிக்குக் குல்லாவும் வாங்கி வருவேன். நான் மறவாமல் பெருங்காயம் வாங்கி வருவதாக அம்மா வுக்குச் சொல். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என் வணக்கத்தைத் தெரிவி.

உன் அன்புள்ள அண்ணன்,
அர்த்தநாரி.

திரு. பி. மாணிக்கம்,
15, கடை வீதி,
ஈரோடு.

தந்தை : நீ மிகவும் கெட்டிக்காரன். நன்றாக எழுதியிருக்கிறாய்.

| | | |
|---|---|---|
| நவராத்திரி | ஏற்றபடி | உறை |
| விடுமுறை | அன்புகூர்ந்து | பின்புறம் |
| விலாசம் | வேறுபடும் | மறவாமல் |
| வலப்பக்கம் | கோவையாக | வணக்கம் |
| தொடங்கி | ஆவலாய் | தெரிவி |
| தொடர்பு | | |

## பயிற்சி

1. சென்னையில் உள்ள உன் அண்ணனுக்குப் புத்தகம் வாங்கி வரும்படி ஒரு கடிதம் எழுது.

2. பொம்மை வாங்கி வரும்படி எழுதிய உன் தங்கைக்குப் பதிலாக ஒரு கடிதம் எழுது.

3. அயலூரில் உள்ள உன் தகப்பனாருக்கு உனக்குப் பணம் அனுப்பும்படி ஒரு கடிதம் எழுது.

4. உன் அண்ணன் கலியாணத்திற்குப் போவதற்காக விடுமுறை கோரி உன் உபாத்தியாயருக்குக் கடிதம் எழுது.

5. ஒவ்வொரு கடிதத்திற்கும் ஐந்து பாகங்கள் உண்டு.

(1) எழுதுபவரின் விலாசமும் தேதியும்.
(2) யாருக்கு எழுதுகிறோமோ அவரை அழைப்பது.
(3) எழுதும் சமாசாரம்.
(4) முடிவு.
(5) மேல் விலாசம்.

இவற்றை நினைவில் வைத்துக்கொண்டு கடிதம் எழுதிப் பழகு.

6. இவ்விவரத்தைப் பூர்த்தி செய் :

கடிதத்தை எழுதி —— போடவேண்டும். தபால்காரர் பெட்டியிலிருந்து —— எடுத்துப் போவார். அவர் கடிதங்களை —— அடித்துப் —— இட்டுக் கட்டுவார். பைகளை —— கொண்டுபோய் —— சேர்ப்பார்கள். இரயிலில் உள்ள கடிதங்களை ஊர்வாரியாகத் —— தனித்தனி —— இட்டுக் கட்டி வைப்பார். அவர் ஒவ்வொரு——அதைச் சேர்ந்த ஊர்களுக்குப் போக வேண்டிய——அடங்கிய பையை ——. தபால்காரர் பெற்றுக்கொண்டு போய், —— முத்திரை அடிப்பார். பிறகு கடிதங்களை —— பிரித்து எடுத்துக் கொண்டு —— சென்று கொடுப்பார்.




# 15. குடிவீட்டின் வரலாறு

இக்காலத்தில் நாம் நாடுகளில் வசிக்கிறோம். நாடுகளில் கிராமங்களும் நகரங்களும் இருக்கின்றன. கிராமங்களிலும் நகரங்களிலும் நாம் கூட்டமாகக் கூடி வாழ்கிறோம். ஓட்டு வீடுகளும், மாடி வீடுகளும், மாளிகைகளும் கட்டிக்கொண்டு அவற்றில் வசிக்கிறோம். இவை போன்ற உறைவிடங்கள் ஆதிகாலத்தில் இருந்தனவா? அக்காலத்து மக்கள் எங்கு எவ்வாறு தங்கி வசித்திருப்பார்கள்?

ஆதி காலத்தில் நாடு நகரங்கள் கிடையா. எங்கும் காடாகவே இருந்தது. அக்காலத்து மக்கள் காடுகளிலேயே வசித்து வந்தார்கள். அவர்கள் கூட்டமாக ஓர் இடத்தில் கூடி வாழாமல் தனித் தனியாகப் பிரிந்து வாழ்ந்தார்கள். அவர்களுக்கு நம்மைப்போல வீடுகட்டிக்கொள்ளத் தெரியாது.

அவர்கள் மிருகங்களைப் போலவே வெயிலில் உலர்ந்தும் மழையில் நனைந்தும் காடுகளில் அலைந்தும் திரிந்தார்கள் ; மர நிழலிலும், புதர் மறைவிலும் தங்கி வாழ்ந்தார்கள்.

அந்நிலையில் அவர்கள் கொடிய மிருகங்களால் அடிக்கடி துன்புற நேர்ந்தது. அவற்றின் கொடுமையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி அவர்கள் மலைக்குகைகளில் மறைந்து வசிக்கலானார்கள். அவையும் அவர்கட்குப் பாதுகாப்பான இடங்களாக அமையவில்லை. ஆகவே அவர்கள் மரக்கிளைகளில் தழைகளால் கூடாரம் போல அமைத்துக்கொண்டு வசிக்கத் தொடங்கினர்.

தனித்து வாழ்ந்த மக்கள், நாளடைவில் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து வாழ ஆரம்பித்தார்கள். பிறகு மனைவி மக்களோடு குடும்பங்குடும்பமாக வாழ வேண்டிய நிலைமை உண்டாகியது. அப்பொழுது அவர்களால் மரக்கிளைகளில் வசிக்க முடியவில்லை. எனவே அவர்கள் உயரமான பரண்களை அமைத்துக் கொண்டும், நீர் நிலையின் நடுவில் ஓடங்களில் கூடாரம் அமைத்துக் கொண்டும் வசிக்கலானார்கள்.

பின்னர் அவர்கள் சிறிது சிறிதாக நாகரிகம் அடைந்தனர் ; துன்பம் செய்யும் மிருகங்களை வேட்டையாடிக் கொல்வதற்கு வேண்டிய கருவிகளைச் செய்துகொள்ளக் கற்றனர் ; நிலத்தைப் பண்படுத்தி உணவுப் பொருள்களைப் பயிர் செய்யவும் தெரிந்து கொண்டனர். அந்நிலையில் வெவ்வேறு இடங்களில் பிரிந்து வாழ்ந்த பல குடும்பத்தினர் ஓர் இடத்தில் சேர்ந்து வசிக்கத் தொடங்

கினர். அப்பொழுது அவர்கள் மரக்கிளைகளாலும், இலைகளாலும், புல்லாலும் குடிசைகளைக் கட்டிக் கொண்டு அவற்றில் வசித்து வந்தார்கள். இவற்றின் சின்னங்களை நாம் இன்றும் கிராமங்களில் காணலாம்.

இந்நிலையில் மக்கள் நெடுங்காலம் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் அவர்கள் மண்ணைப் பிசைந்து சுவர் வைத்து, அச்சுவரின்மீது கூரை வேய்ந்து பெரிய குடிசைகளை அமைக்கக் கற்றனர். பிறகு மரங்களை உபயோகித்துச் சிறிய ஓலை வீடுகளைக் கட்டிக்கொள்ளப் பழகினர்.




மண் சுவர் அதிகநாள் நிலைத்திராமல் அடிக்கடி மழையால் சிதைந்து வந்தது. அதைக் கண்ட மக்கள் செங்கல் செய்து சுவர் வைக்கத் தெரிந்தனர். மண்ணைப் பிசைந்து கற்களாக அறுத்துச் சூளையாக அடுக்கிச் சுட்டனர். சுட்ட செங்கற்களை அடுக்கிச் சுவர் வைத்து, அதன்மேல் மரத் தூலங்களை அமைத்துப் பெரிய வீடுகளைக் கட்டிக் கொண்டனர்.

சுவருக்குச் செங்கல் செய்யத் தெரிந்ததும், அவர்கள் கூரைக்கு ஓடுகளை அறுத்துச் சுட்டு உபயோகிக்கலாம் என்பதை அறிந்தார்கள். மண்

ணைப் பிசைந்து வளைவான ஓடுகளை அறுத்துச் சுட்டு அவற்றை அடுக்கிக் கூரை அமைத்துக் கொண்டார்கள். செங்கல் சுவரும் ஓட்டுக் கூரையும் நீண்டகாலம் சிதையாமல் இருந்தன. அது முதல் மக்கள் உறைவிடத்தைப் பற்றிய கவலையின்றி வாழலானார்கள். நாகரிகம் மிக்க இக்காலத்திலும் செங்கல்லும் ஓடும் வீடு கட்ட உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

பிறகு மக்கள் சுண்ணும்பைக் கண்டுபிடித்தார்கள். செங்கற்களைப் பொருத்த மண்ணுக்குப் பதிலாகச் சுண்ணும்பை உபயோகிக்கத் தொடங்கினர். சுண்ணும்பின் உபயோகத்தை அறிந்ததும், அவர்கள் ஓட்டுக்குப் பதிலாகச் செங்கல்லையும் சுண்ணும்பையும் கொண்டே கூரை அமைக்கலாம் என்பதைக் கண்டார்கள். பின்னர் மாடி வீடுகளும், மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் தோன்றலாயின.

இப்பொழுது சிமெண்டு என்னும் ஒருவகைச் செயற்கைச் சுண்ணம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சுண்ணும்புக்குப் பதிலாகச் சிமெண்டும், மரத்திற்குப் பதிலாக இரும்புமே இப்பொழுது அதிகமாக உபயோகப்படுகின்றன. இக்காலத்தில் கட்டப்படும் வீடுகள் எல்லாம் சிமெண்டினுலும் இரும்பினுலுமே கட்டப்படுகின்றன. அவை நெடுங்காலம் அழிவின்றி நிலைத்திருக்கின்றன. தீயினுலும் மழையினுலும் இவற்றிற்குத் தீங்கு செய்ய முடியாது. ஆகவே நாம் இன்று அச்சமும் கவலையும் இன்றி அமைதியாக வாழ்ந்து வருகிறோம்.

மனித வாழ்க்கை ஒவ்வொரு வகையிலும் இவ்வாறே முன்னேறி வந்திருக்கிறது. உணவு, உடை,

மொழி ஆகிய ஒவ்வொன்றிலும் நாம் படிப்படியாக உயர்ந்து இன்றுள்ள நிலையை அடைந்திருக்கிறோம்.

| | | |
|---|---|---|
| கூட்டமாக | காப்பாற்றி | நெடுங்காலம் |
| உறைவிடங்கள் | பாதுகாப்பு | வேய்ந்து |
| அக்காலம் | அமைய | சிதைந்து |
| தனித்தனியாக | நாளடைவில் | கூரை |
| அடிக்கடி | நீர்நிலை | கவலையின்றி |
| துன்புற | துன்பம் | நாகரிகம் |
| நேர்ந்தது | பண்படுத்தி | தீங்கு |
| கொடுமை | சின்னங்கள் | முன்னேறி |

### கேள்விகள்

1. ஆதிகாலத்து மக்கள் எங்கு எவ்வாறு வசித்தார்கள்?

2. அவர்கள் மிருகங்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள என்ன செய்தார்கள்?

3. மக்கள் எப்பொழுது மண்ணையும், மரத்தையும் கொண்டு வீடு கட்டப் பழகினர்?

4. எப்பொழுது மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் தோன்றலாயின?

5. தற்காலத்தில் கட்டப்படும் வீடுகள் எவற்றைக் கொண்டு கட்டப்படுகின்றன? அவை எப்படிப்பட்டவை?

6. மக்கள் எவ்வாறு இன்றைய நிலையை அடைந்துள்ளனர்?

### பயிற்சி

1. உங்கள் ஊரிலுள்ள குடியிருப்பு வீடுகளைச் சொல்.

2. மனிதனுடைய உடை, உணவு இவற்றின் வரலாற்றையும் தெரிந்துகொள்.

3. கூட்டமாக, தனித்தனியாக, அடிக்கடி, நாளடைவில், நெடுங்காலம், முன்னேறி, நாகரிகம்— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

4. கடவுள், தெய்வம், திருமால், சுரஸ்வதி, மக்கள், அரசர், அண்ணன், தம்பி, மகள், மகன், மனைவி—இச் சொற்கள் எல்லாம் மனிதர் அல்லது தேவர் பெயரைக் குறிக்கின்றன. இவை **உயர்திணைச் சொற்கள்** எனப் படும்.

மரம், காடு, மிருகம், புலி, பறவை, கல், மண்— இவை மனிதரும் தேவரும் அல்லாத உயிருள்ள பொருள் கள் உயிரில்லாத பொருள்கள் ஆகியவற்றின் பெயரைக் குறிக்கின்றன. இவை **அஃறிணைச் சொற்கள்** எனப் படும்.

மனிதர் அல்லது தேவரைக் குறிக்கும் சொற்கள் **உயர்திணை**. உயிருள்ளவையும் இல்லாதவையுமாகிய மற்றப் பொருள்களைக் குறிக்கும் சொற்கள் **அஃறிணை**. **உயர்திணை, அஃறிணை எனத் திணை இருவகைப்படும்.**

5. ஃ—இது ஆய்த எழுத்து.

6. **சுட்ட** செங்கற்களை **அடுக்கிச்** சுவர் **வைத்தனர்**. இந்த வாக்கியத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொற்கள் வினையை (செயலை)க் குறிக்கின்றன. இவை **வினைச் சொற்கள்**.

இவற்றுள் வைத்தனர் என்பது முடிந்த வினையை (செயலை)க் குறிக்கிறது. ஆகவே இது முற்றுவினை. இது **வினைமுற்று** எனப்படும்.

சுட்ட, அடுக்கி என்பன முடியாமல் குறைந்து நிற் கும் வினையை (செயலை)க் குறிக்கின்றன. இவை **எச்ச வினைகள்**.

இவ்விரண்டினுள் சுட்ட என்னும் எச்சவினை செங் கல் என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆகையால் அது பெயரெச்சம் எனப்படும்.

அடுக்கி என்பது வைத்தனர் என்னும் வினையைக் கொண்டு முடிகிறது. ஆகையால் அது **வினையெச்சம்** எனப்படும்.

இவ்வாறு வினைச்சொல் முற்றுவினை, எச்சவினை என இருவகைப்படும்.

எச்சவினை பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.



## 16. கரிகாலன் நியாய விசாரணை

தமிழகத்தின் ஒரு பகுதியாகிய சோழநாட்டை ஆண்ட சோழ மன்னர் பலராவர். அவர்களுள் கரிகாலன் என்பவன் பெரும்புகழ் படைத்த பேரரசனுக விளங்கினான். அவன் குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்து, தாய்மாமனாகிய இரும்பிடர்த் தலையார் பாதுகாப்பில் வளர்ந்து வந்தான். அவனது தாயத்தார் அரசுரிமையைக் கவர விரும்பி அவனைக் கொல்லச் சதி செய்தனர். அவர்கள் ஒரு நாள் இரவில் கரிகாலன் இருந்த மனையில் தீயிட்டனர். இரும்பிடர்த்தலையார் அதனை அறிந்து அவனை அம்மனையிலிருந்து வெளியேற்றினார். வெளியேற்றும்போது அவனது கால் தீப்பட்டுக் கருகியது. அதனால் அவனுக்குக் 'கரிகாலன்' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

கரிகாலன் சிறு பிள்ளையாக இருந்தபோதே அரசனாகிவிட்டான். அவன் வயதில் சிறியவனாக இருந்தாலும் அறிவிலும் திறமையிலும் பெரியவனாக இருந்தான்; வீரத்திலும் ஈகையிலும் சிறந்து விளங்கினான். அவன் தன்னை இளைஞன் என்று இகழ்ந்த பகைவர்களை வென்று அடக்கினான். கரிகாலனது ஆட்சித் திறமையைக் கண்டு மற்றச் சேர பாண்டிய அரசர்களும் வியந்தனர்.

கரிகாலனது ஆட்சியில் சோழநாடு பலவகையிலும் சிறந்து விளங்கியது. அவன் காடுகளை அழித்து நாடாக்கினான்; காவிரியாற்றுக்குக் கரை கட்டினான்; நாடெங்கும் நீர்நிலைகளை அமைத்து நீர் வளத்தைப் பெருக்கினான்; குடிமக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான்; தொழிலாளர்களை ஆதரித்துத் தொழில்களை வளர்த்தான்; புலவர்களைப் போற்றிக் கல்வியைப் பரப்பினான்; கொடியவர்களைக் கடுமையாகத் தண்டித்தான்; நல்லவர்களை அன்பாகப் போற்றினான். அவன் ஆட்சியில் சோழநாடு வள நாடாக ஆகியது; மக்கள் குறையின்றி இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

கரிகாலன் நாள்தோறும் தானே வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்குவது வழக்கம். ஒரு நாள் அவன் வழக்கப்படியே அவையில் அமர்ந்து நியாய விசாரணை நடத்திக்கொண்டிருந்தான். அப்பொழுது வயது முதிர்ந்த இருவர் அங்கு வந்தனர். அவர்கள் தங்கள் வழக்கை அரசனிடம் கூறித் தீர்த்துக் கொள்ளுவதற்காகவே வந்தார்கள். வந்தவர்கள் ஆசனத்தில் வீற்றிருந்த கரிகாலனைப் பார்த்தார்கள். அவன் இளமை கண்டு அவர்கள் அவனை

இகழ்ச்சியாக எண்ணினர் ; 'இந்தச் சிறு பிள்ளையா நம் வழக்கைக் கேட்டு உண்மை தெரிந்து தீர்ப்புக் கூறப்போகிறான்? நன்றாய் இருக்கிறது! இவன் தீர்ப்புக் கூறுவது இருக்கட்டும். முதலில் நம் வழக்கைப் புரிந்து கொள்ளவே இவனால் முடியாதே. இவனிடம் வழக்கைக் கூறுவதால் என்ன பயன்?' என்று எண்ணி, ஒன்றும் கூறாமல் திரும்பினர்.

கரிகாலன் அவர்கள் திரும்பிச் செல்வதைக் கவனித்தான். அவன் அவர்களுடைய முகக் குறியிலிருந்தே அவர்கள் எண்ணத்தைத் தெரிந்து கொண்டான். உடனே அவன், அவர்களை அழைத்து வரும்படி காவலாளனை ஏவிவிட்டு, எழுந்து உள்ளே சென்றான். சென்றவன் சிறிது நேரத்தில் நரைத்த மயிர்முடியும் தாடியும் கட்டிக் கொண்டு வயது முதிர்ந்த கிழவனைப்போல வந்து ஆசனத்தில் அமர்ந்தான். அவையில் இருந்தவர்கள் அவனை அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் யாரோ ஒரு கிழவன் வந்து ஆசனத்தில் அமர்வதாகவே எண்ணித் திகைத்தனர்.

காவலன் அவ்விருவரையும் அழைத்துவந்து அரசன் முன் நிறுத்தினான். அவர்கள் இளம்பிள்ளை இருந்த ஆசனத்தில் நரைத்த முதியவன் ஒருவன் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அவர்கள், 'இவன் அறிவும் அனுபவமும் முதிர்ந்தவனாகக் காணப்படுகிறான். இவன் நம் வழக்கைத் தீர்க்க வல்லவனே. இவனிடம் கூறலாம்' என்று எண்ணினார்கள். அதற்குள் அரசன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் வந்த காரணம் என்ன? உங்கள் குறையைக் கூறுங்கள்" என்றான். அவர்கள் தங்கள்

வழக்கை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அரசன் இருவர் கூறியவற்றையும் பொறுமையாகக் கேட்டான்; நடு நிலையில் இருந்து ஆராய்ந்தான்; உண்மையைக் கண்டு அறிந்தான்: இருவரும் "நியாயம், நியாயம்" என்று ஏற்றுக் கொள்ளுமாறு தீர்ப்புக் கூறினான். வழக்கு உரைத்தவர்கள் அவன் அறிவையும் ஆராய்ச்சியையும் பாராட்டினார்கள். மற்றவர்கள் அவன் சாமர்த்தியத்தை எண்ணி மகிழ்ந்தார்கள்.

உடனே கரிகாலன் அங்கேயே தன் வேஷத்தைக் கலைத்தான்; அவன் அவர்கள் முதலில் கண்ட சிறு பிள்ளையாகத் தோன்றினான். அதைக் கண்டு அவர்கள் திகைப்பு அடைந்தார்கள். "இச் சிறு பிள்ளையா இவ்வளவு புத்திசாலித் தனமாகத் தீர்ப்புக் கூறினான்? சோழர் குலத்தின் பெருமையே பெருமை!" என்று வியந்தார்கள். பின்பு அவர்கள் அரசனை வாழ்த்திவிட்டுச் சென்றார்கள்.

| | | |
|---|---|---|
| பகுதி | தாயத்தார் | குறையின்றி |
| அமர்தல் | மன்னர் | சதி |
| அவை | அநுபவம் | படைத்த |
| வெளியேறு | முதிர்ந்த | வல்லவன் |
| பெரும்புகழ் | திறமை | தீர்ப்பு |
| குறை | பாதுகாப்பு | இகழ்ந்த |
| வழக்கு | ஏற்றுக்கொள்ளல் | அரசுரிமை |
| வசதி | நரைத்த | சாமர்த்தியம் |

### கேள்விகள்

1. கரிகாலனுக்கு அப்பெயர் ஏன் வழங்கலாயிற்று?
2. கரிகாலன் எப்படிப்பட்ட குணமுள்ளவன்?

3. கரிகாலன் காலத்தில் சோழநாடு எவ்வாறிருந்தது?

4. வழக்கைக் கூறவந்த முதியவர்கள் ஏன் திரும்பினார்கள்?

5. கரிகாலன் அவர்களது வழக்கை எவ்வாறு தீர்த்தான்?

### பயிற்சி

1. இது போன்ற இலக்கியக் கதைகளை வாசி.

2. இதைக் கரிகாலனே கூறுவதாகச் சொல்.

3. இதை வழக்குரைக்க வந்த முதியோர் கூறுவதாகச் சொல்.

4. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம் இவற்றைச் சொல்:

கரிகாலன் தன்னை இகழ்ந்த பகைவர்களை வென்று அடக்கினான்.
கரிகாலன் இருந்த மனையில் தீயிட்டனர்.
காடுகளை அழித்து நாடு ஆக்கினான்.

5. கீழ் வரும் வாக்கியத்தில் உள்ள உயர்திணைப் பெயர்ச் சொற்களையும், அஃறிணைப் பெயர்ச் சொற்களையும் தனித்தனியாகச் சொல்:

தாயத்தார் ஒரு நாள் இரவில் கரிகாலன் இருந்த மனையில் தீயிட்டனர்.

6. கீழ்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றையும் இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரி:

(1) தாயத்தார் அரசுரிமையைக் கவர விரும்பிக் கரிகாலனைக் கொல்லச் சதி செய்தனர்.

(2) மிருகங்களின் கொடுமையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டி மக்கள் மலைக் குகைகளில் மறைந்து வசிக்கலாயினார்.

(3) பாரதியாருக்கு அரசரோடு பழக விருப்பம் இல்லாமையால் அவர் எட்டையபுரத்தை விட்டு மதுரைக்கு வந்தார்.

7. தந்தை—இது ஆணைக் குறிக்கிறது. இது ஆண்பால்.

தாய்—இது பெண்ணைக் குறிக்கிறது. இது பெண்பால்.

புலவர்கள்—இது பலரை குறிக்கிறது. இது பலர்பால்.

இவை மூன்றும் உயர்திணைக்கு உரியவை.

வீடு—இது ஒன்றைக் குறிக்கிறது. இது ஒன்றன்பால்.

வீடுகள்—இது பலவற்றைக் குறிக்கிறது. இது பலவின்பால்.

இவை இரண்டும் அஃறிணைக்கு உரியவை.

8. இப் பாடத்தில் உள்ள ஆண்பால் பெயர்கள் ஐந்து சொல்.

9. பலர்பால் பெயர்கள் ஆறு சொல்.

10. ஒன்றன்பால் பெயர்கள் மூன்று சொல்.

11. பலவின்பால் பெயர்கள் இரண்டு சொல்.

12. இப்பாடத்தில் வந்துள்ள ஆண்பால் பெயர்களுக்குப் பெண்பால் பெயர்கள் சொல்.



# 17. வஞ்சகப் பூனை

கங்கையாற்றின் கரையில் திரிகூடம் என்னும் மலை ஒன்று உண்டு. அம்மலையிப் மிகப்பெரிய வித்திமரம் ஒன்று இருந்தது. அதில் பலவகைப் பறவைகளும் தங்கள் குஞ்சுகளோடு தங்கி வாழ்ந்து வந்தன. அம்மரத்தின் அடியில் ஒரு பொந்து இருந்தது. அந்தப் பொந்தில் ஒரு கிழக் கழுகு நெடுங் காலமாக வசித்து வந்தது. அதற்கு நகமும் கண்ணும் இல்லாமையால் அதனால் வெளியில் சென்று இரை தேட முடியவில்லை. கிழத்தனத்தாலும் இரையில்லாமையாலும் அது மிகவும் மெலிந்திருந்தது.

மரத்தில் வாழும் மற்றப் பறவைகள் கழுகின் நிலையைக் கண்டு இரக்கம் கொண்டன. அவை நாள்தோறும் தங்கள் குஞ்சுகளுக்காகக் கொண்டு வரும் இரையில் அக்கழுகுக்கும் சிறிது கொடுத்து வந்தன. கழுகு அவ்விரையை உண்டு உணவுக்

கவலை இன்றி உயிர் வாழ்ந்து வந்தது. அது பறவைகள் தனக்குச் செய்யும் நன்றிக்குப் பதிலாக, அவை இரைதேடச் செல்லும் சமயங்களில் அவற்றின் குஞ்சுகளைக் காத்து வந்தது. கழுகின் காவலில் பறவைக் குஞ்சுகள் அச்சம் இன்றி இருந்தன.

ஒரு நாள் அவ்வழியாக ஒரு பூனை வந்தது. அது வித்து மரத்தில் பறவைக் குஞ்சுகள் கூட்டமாக விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டது. மரப்பொந்தில் கழுகு காவல் இருப்பது பூனைக்குத் தெரியாது. அது பறவைக் குஞ்சுகளைப் பிடித்துத் தின்ன எண்ணி அம்மரத்தின் அருகில் வந்தது. பறவைக் குஞ்சுகள் பூனையைக் கண்டு பயந்து கூச்சலிட்டன. குஞ்சுகளின் கூச்சலைக் கேட்டுக் கழுகு வெளியில் வந்தது. அது, "குஞ்சுகளே, நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? இங்கு அயலார் யாரேனும் வந்தார்களா?" என்றது.

கழுகின் குரலைக் கேட்டுப் பூனை திடுக்கிட்டது. அச்சத்தால் அதற்கு நடுக்கம் உண்டாகியது. அது மெல்ல மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு, 'நாம் அறியாமல் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டோம். இனி, இக்கழுகினிடமிருந்து தப்புவது இயலாத காரியம். ஆகவே வஞ்சகத்தால் இக்கழுகை ஏமாற்றி வந்த காரியத்தை முடித்துக் கொள்ளப் பார்ப்பதே அறிவுடைமை ஆகும்' என்று எண்ணி, கழுகின் அருகில் சென்று, "ஐயனே, உங்கள் அடிமையாகிய பூனை வணங்குகிறேன்" என்றது.

பூனை என்றதும் கழுகுக்குக் கடுங்கோபம் உண்டாகியது. அது "நீ இங்கு வரலாகாது. இப்பொழுதே இவ்விடம் விட்டு ஓடிப்போ. இல்லையேல் கொன்று விடுவேன்" என்று கடுமையாகக்

கூறியது. பூனை, "ஐயனே, நான் பூனை என்பதனாலேயே நீங்கள் என்னைப் பகைவனாக நினைப்பது நேர்மை அன்று. நான் என் வரலாற்றையும், உங்களை நாடி வந்த காரியத்தையும் சொல்லி விடுகிறேன். அவற்றைக் கேட்டுவிட்டுப் பிறகு எது செய்யத் தக்கதோ அதைச் செய்யுங்கள்" என்று மிகவும் பணிவாகக் கூறியது.

கழுகு பூனையை நோக்கி, "அப்படியானால் உன் வரலாற்றையும், நீ வந்த காரியத்தையும் சொல்" என்றது. பூனை, "அறிஞனே, நான் பூனையாக இருந்தாலும் அந்த இனத்திற்கு உரிய குணம் செயல்களை விட்டு நெடுங்காலம் ஆயிற்று. பூனை இனத்தை எல்லோரும் இகழ்கிறார்கள். அந்த அவமானம் தாங்காமல் நான் அவ்வினத்தையே துறந்து வந்துவிட்டேன். நான் பல வருஷங்களாகக் கங்கைக் கரையில் விரதம் இருந்து தவம் செய்து வருகிறேன். நீர் சிறந்த அறிஞர் என்றும், எல்லாக் கலைகளையும் அறிந்து அவற்றில் கூறியுள்ளபடி ஒழுகும் தரும சீலர் என்றும் பறவைகள் புகழ்ச்சியாகப் பேசிக் கொள்வதைக் கேட்டேன். உம்மை அடுத்து உபதேசம் பெறலாம் என்று எண்ணி வந்தேன். நீரும் என்னைப் பூனை என்று இகழ்ந்து கொல்வதாகப் பயமுறுத்துகிறீர். ஏழையாகிய நான் வேறு யாரை அடைந்து எவ்வாறு வாழ்வேன்?" என்றது.

கழுகுக்குப் பூனையினிடம் இரக்கம் உண்டாகியது. அது பூனையை நோக்கி, "நான் உன் வரலாற்றை அறியேன். நீயும் உன் இனத்தாரைப் போல உயிர்களைக் கொன்று தின்று வாழும் இயல்புடையவன் என்று எண்ணியே அவ்வாறு கூறி

னேன்" என்றது. பூனை அதைக் கேட்டு, "சிவ சிவ! நான் மாமிசம் தின்பதைவிட்டு நெடுங்காலம் ஆயிற்றே! நான் என் இனத்தைத் துறந்து வெளியேறிய நாள் முதல் காய் கனி கிழங்குகளையே உண்டு உயிர் வாழ்ந்து வருகிறேன். குலப் பழியைப் போக்கப் பெரியோரை அடுத்து உபதேசம் பெற்றுவரும் நான் 'கொன்று தின்னும் கொடுமையை மனத்தாலும் நினைப்பேனோ? எல்லாம் அறிந்த நீர் எளியவனாகிய என்னைப் பற்றி இவ்வாறு நினைக்கலாமா?" என்று கழுகுக்கு நம்பிக்கை உண்டாகும்படி நயமாகக் கூறியது.

கழுகு பூனையின் சொல்லை உண்மை என்று நம்பி அதற்கு இடம் கொடுத்தது. பூனை நாளை தோறும் பறவைகள் இரை தேடச் சென்ற பிறகு அவற்றின் குஞ்சுகளைப் பிடித்துக் கொன்று கொண்டு வந்து பொந்திலேயே ஒரு பக்கத்தில் வைத்துத் தின்று வந்தது. கழுகுக்குக் கண் இல்லாமையால் பூனையின் திருட்டுச் செயல் தெரியவில்லை.

ஒவ்வொரு நாளும் குஞ்சுகள் குறைவதைக் கண்டு பறவைகள் கலக்கம் அடைந்தன. நாள் தோறும் குஞ்சு இழந்த பறவைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. எனவே பறவைகள் கூடித் தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின. பூனை அதனை அறிந்து கழுகுக்குத் தெரியாமல் அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டது.

பறவைகள் இரை தேடச் செல்வதை விட்டுத் திருட்டைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டன. அவை சுற்றுப் புறத்தில் உள்ள மறைவான இடங்களை எல்லாம் ஆராய்ந்து கொண்டே கழுகின் பொந்தண்டை வந்தன. பொந்தின் ஒரு

பக்கத்தில் குஞ்சுகளின் இறகுகளும் எலும்புகளும் குவிந்திருப்பதை அவை கண்டன. அவை அந்தப் பொந்தில் உள்ள கழுகே தாங்கள் இல்லாத சமயத்தில் தங்கள் குஞ்சுகளைக் கொன்று தின்று வந்திருக்கிறது என்று எண்ணின. பறவைகளுக்குக் கழுகின் மீது கடுங்கோபம் உண்டாகியது. அவை அங்கேயே அந்தக் கழுகைக் கொத்திக் கொன்றன. வஞ்சகப் பூனைக்கு இடம் கொடுத்த குற்றத்தால் கழுகு பறவைகளின் கோபத்திற்கு இலக்காகி இறந்தது.

| | | |
|---|---|---|
| கங்கை | அடிமை | நம்பிக்கை |
| திரிகூடம் | நேர்மை | நயமாக |
| வித்தி மரம் | வரலாறு | சோதிக்க |
| கழுகு | அவமானம் | முயற்சி |
| கூச்சல் | கலைகள் | ஆராய்ந்து |
| தைரியம் | தருமசீலர் | கடுங்கோபம் |
| ஆபத்து | புகழ்ச்சி | வஞ்சகம் |
| அறிவுடைமை | உபதேசம் | குற்றம் |
| இலக்கு | எலும்புகள் | துறந்து |

## கேள்விகள்

1. கழுகு பறவைகளின் நன்றிக்குப் பதிலாக என்ன செய்தது?
2. பூனை பறவைக் குஞ்சுகளைத் தின்ன என்ன உபாயம் செய்தது?
3. பூனை கழுகை எவ்வாறு வஞ்சித்தது?
4. பூனைக்கு இடம் கொடுத்ததால் கழுகிற்கு என்ன நேர்ந்தது?
5. இந்தக் கதையால் நீ தெரிந்து கொள்ளுவதென்ன?

## பயிற்சி

1. இக்கதை எந்தப் புத்தகத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்.

2. அந்தப் புத்தகத்தில் உள்ள மற்ற கதைகளையும் வாசி.

3. இந்தக் கதையைப் பூனை சொல்வதாகச் சொல்.

4. இந்தக் கதையைப் பறவைகள் சொல்வதாகச் சொல்.

5. பின்வரும் சொற்களில் ஒவ்வொன்றிற்கும் பால் கூறு :

மணி, மங்களம், அத்தை, மகள், மக்கள், குடியானவர்கள், கழுகு, பூனை, பறவைகள், வேடன், குரங்குகள், மரங்கள்.

6. கீழ்வரும் வாக்கியத்தில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றைச் சொல் :

(1) மரத்தில் வாழும் பறவைகள் கழுகின் நிலையைக் கண்டு இரக்கம் கொண்டன.

(2) வயது முதிர்ந்த இருவர் அங்கு வந்தனர்.

(3) அவன் சாமர்த்தியத்தை எண்ணி மகிழ்ந்தார்கள்.

7. ஒரு பூனை வந்தது.
பூனை வளர்கிறது.
பார்த்து வருவோம்.

இவ்வாக்கியங்களில் 'வந்தது' என்பது முன்னமே நடந்துவிட்ட செயலைக் குறிக்கிறது. ஆகவே இது இறந்த காலம்.

வளர்கிறது என்பது இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் செயலைக் குறிக்கிறது. இது நிகழ் காலம்.

வருவோம் என்பது இனி நடக்கப் போகும் செயலைக் குறிக்கிறது. இது எதிர் காலம்.

இவ்வாறு வினைச் சொற்கள் காலம் பற்றி இறந்த கால வினைச்சொல், நிகழ்கால வினைச்சொல், எதிர் கால வினைச்சொல் என மூன்று வகைப்படும்.

## 18. குரங்கும் குருவிகளும்

குளிராலும் பசியாலும்
    குன்றியலே குரங்கொன்று
வளராலின் கீழ்வந்து
    மழைக்கொதுங்கி நிற்குங்கால்,
தளராமல் அம்மழையில்
    தாம் அமைத்த கூடுகளில்
உளவான குருவியெலாம்
    உற்றறிந்த இதன் துயரை. (1)
' குருவிகளைப் பாரும்நீர்
    கூடமைத்து வாழ்கின்றோம் ;
உருவினிலோ மனிதரையே
    ஒக்கின்றீர் ; எம்மைவிடக்
கருவிமிகப் படைத்துள்ளீர் ;
    கூடொன்றைக் கட்டியதில்
வருமையில் அஞ்சாமல்
    வாழவில்லை ஏன் ?' என்ன. (2)
நன்றுரைத்த தானாலும்
    நாடாமல் கோபத்தால்,
' இன்றெனை நீர் ஏளனமாய்
    ஏன்சொன்னீர் ? உம்போல
நன்றாகக் கூடுகட்ட
    நானறியேன் ; ஆனாலும்
இன்றதனைப் பிய்த்தெறிய
    எளிதாகத் தெரியும்,' என, (3)
கூட்டினைடும் அதில்வாழும்
    குருவியையும் குமைத்திட்டே
ஓட்டிவிட்டே இறங்கியது ;
    மூடர்களுக் கொருபுத்தி

காட்டிடினும் பெரியோர்கள்
கைக்கொள்ளார் ; சொன்னவர்க்கும்
கேட்டினையே தருவர் ; அதால்
கீழோர்க்குப் புத்தி சொல்லேல். (4)

—பஞ்ச தந்திரம்

## கேள்விகள்

1. குரங்கு அடைந்த துயரம் என்ன?
2. குருவிகள் என்ன சொல்லின?
3. குரங்கு என்ன சொல்லியது? என்ன செய்தது?
4. இக்கதையால் உணர்த்தப்படும் நீதி என்ன?

## பயிற்சி

1. இப்பாட்டுகளைப் படி.
2. பாட்டுகளின் திரண்ட கருத்தைச் சொல்.
3. பதம் பதமாகப் பொருள் சொல்.
4. இக்கதையைக் குரங்கு சொல்வதாகச் சொல்.
5. இக்கதையைக் குருவிகள் சொல்வதாகச் சொல்.
6. கீழே கோடிட்டுள்ள இடங்களில் 'போ' என்னும் சொல்லைப் பொருத்தமாக மாற்றி வைத்து வாசி.

நான் நேற்றுப் ——
நான் இப்பொழுது ——
நான் நாளை ——
குரங்கு முன்னமே ——
குரங்கு இப்பொழுது ——
குரங்கு இனி ——

7. கீழுள்ள வாக்கியங்களில் இறந்தகால வினைச் சொற்களுக்குப் பதிலாக நிகழ்கால வினைச்சொற்களை வைத்துச் சொல் :

(1) பூனை வந்தது.
(2) குஞ்சுகள் கூச்சலிட்டன.
(3) கரிகாலன் சென்றான்.
(4) இருவர் வந்தனர்.



# 19. சென்னை மாநகரம்

நமது நாடு கிராமங்கள் நிறைந்த நாடாகும். ஆயினும் இதில் பல பெரிய நகரங்களும் உள்ளன. நம் நாட்டின் தலைநகரம் டில்லி மாநகரம் என்பது ஆகும். அது அவ்வளவு பெரிய நகரம் அன்று. நம் நாட்டில் உள்ள நகரங்களில் மிகப் பெரியது கல்கத்தா. அதற்கு அடுத்த பெரிய நகரம் பம் பாய். மூன்றுவதாகப் பெரியது சென்னை மாநகரம். சென்னை மாநகரில் பதினான்கு லட்சம் ஜனங்கள் வாழ்கிறார்கள். அது நம் மாகாணத்தின் தலைநகரம் ஆகும்.

சென்னை நகரம் முன்னர் ஜார்ஜ் டவுன், பார்க் டவுன் என இரு பிரிவுகளாக இருந்தது. இப் பொழுது அது பல பிரிவுகளை உடைய பெரு நகர மாக வளர்ந்துள்ளது. அந்நகரத்தைச் சுற்றிலும் பல சிறிய கிராமங்கள் இருந்தன. நாளடைவில்

அவை ஒவ்வொன்றாக அந்நகரத்தோடு சேர்ந்து அதன் பிரிவுகளாகிவிட்டன. அவற்றுள் திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் என்பவை முக்கியமானவை ஆகும். இவையே அன்றி இப்பொழுது புதியவையாகச் சில பகுதிகள் தோன்றியுள்ளன. அவற்றுள் தியாகராய நகர், ஷெனாய் நகர், காந்தி நகர் என்பன சிறப்புடையவை ஆகும்.

சென்னை நகரம் பல மைல்கள் பரப்புள்ள பெரு நகரமாகும். அதில் ஓர் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் போகப் பலவகையான வண்டிகள் இருக்கின்றன. இரயில் வண்டி, மின்சார ரயில் வண்டி, டிராம் வண்டி, மோட்டார் பஸ் ஆகிய பல வகையான விசை வண்டிகள் எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. இவையே அன்றி வாடகை மோட்டார்களும், குதிரை வண்டிகளும், ரிக்ஷா வண்டிகளும் மிகுதியாக உள்ளன. இவற்றின் உதவியால் மக்கள் நகரின் பல பிரிவுகட்கும் விரைவில் சென்று வருகின்றனர்.

சென்னை நகரம் மாகாணத் தலைநகரமாகவும், சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் அமைந்துள்ளது. அதனால் அதில் பல அரசாங்கத் தலைமைக் காரியாலயங்களும், வியாபார ஸ்தலங்களும் நிறைந்துள்ளன. கலாசாலைகளும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன; வைத்தியசாலைகள், இரயில் நிலையங்கள், விமான நிலையம் முதலியவையும் உள்ளன.

சென்னை நகரில் உள்ள கடைத் தெருக்களுள் 'சைனா பஜார்' என்பது மிகவும் முக்கியமானது ஆகும். அதில் விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகள் முதல் தங்க நகைக் கடைகள்வரை பல

வகைக் கடைகளும் உள்ளன. சென்னை நகரில் அமைந்துள்ள ரோடுகளில் மவுண்டு ரோடு சிறப்புடையது. அது அகலமான அழகிய ரோடு ஆகும். அதன் இருபக்கங்களிலும் அழகிய பெரிய கட்டடங்கள் வரிசையாக அமைந்துள்ளன.

சென்னை நகருக்குச் செல்வோர் தவறுமல் பார்க்கவேண்டிய இடங்கள் பல உள்ளன. அவை கப்பல் துறைமுகம், கலங்கரை விளக்கம்,



செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, மிருகக் காட்சிச் சாலை, பொருட்காட்சிச்சாலை, மீன் காட்சிச்சாலை, கைத்தொழில் காட்சிச் சாலை, மூர்மார்க்கெட், ஹைகோர்ட்டு, விமான நிலையம் முதலியவை ஆகும்.

சென்னை நகருக்கு அழகையும் சிறப்பையும் கொடுப்பது அதன் கடற்கரையே ஆகும். உலகத்தில் உள்ள சிறந்த கடற்கரைகளில் சென்னைக்

கடற்கரை இரண்டாவதாகப் புகழப்படுகிறது. அது செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து மயிலாப்பூர் வரை மூன்று மைல் தூரம் பரவிப் பரந்துள்ளது. அக்கடற்கரை ஓரத்தில் பல காரியாலயங்களும் கல்லூரிகளும் உள்ளன. மாலை வேளையில் அங்குத் தூய்மையான குளிர்ந்த கடல் காற்று வீசும். அது உடலுக்கும் உள்ளத்துக்கும் இன்பம் செய்யும். அதனை அனுபவிப்பதற்காக மக்கள் ஒவ்வொரு நாளும் மாலையில் அங்குச் சென்று கூடுவார்கள். அவர்களுக்குப் பொழுது போக்கிற்காக அங்கு ஒலிப்பரப்பியும் வைத்துள்ளனர். மக்கள் கடல் காற்றை அனுபவித்துக்கொண்டே ஒலிபரப்பில் நடைபெறும் பாட்டுக்களையும், பிரசங்கங்களையும் கேட்டு மகிழ்வர்.

நம் மாகாணக் கவர்னரும் மந்திரிகளும் சென்னை நகரிலேயே வசிக்கின்றனர். மாகாணச் சட்ட சபைகளும், மாகாணத் தலைமைக் காரியாலயமும் அந்நகரிலேயே உள்ளன. கவர்னர் மாளிகை கிண்டியில் உள்ளது. சட்டசபைகள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள கட்டடங்களிலும் ராஜாஜி ஹாலை ஒட்டிய புதிய கட்டடங்களிலும் நடைபெறுகின்றன.

சென்னை நகரில் நிலையாக வாழ்பவர்களைத் தவிர, வியாபார வேலையாகவும், அரசாங்கக் காரியமாகவும் வெளியூர்களிலிருந்து நாள்தோறும் பெருந்திரளான மக்கள் அங்கு வருவார்கள். அவர்களில் பலர் சில நாள்கள் அங்குத் தங்கியிருப்பதும் உண்டு. அவர்களுடைய சௌகரியத்திற்காக உணவுச் சாலைகளும், தங்கும் விடுதிகளும், சத்திரங்களும் அங்கு அதிகமாக உள்ளன. மக்களின்

இன்பப் பொழுது போக்கிற்கான சினிமாக் கொட்டகைகள், நாடகக் கொட்டகைகள், சங்கீத அரங்குகள், பிரசங்க மண்டபங்கள் ஆகியவை மிகுதியாக இருக்கின்றன.

சென்னை நகரத்தின் பொது நிர்வாகத்தைக் கவனிக்க ஒரு நகர சபை இருக்கிறது. அதற்கு 'கார்ப்பரேஷன்' என்பது பெயர். அது நகரின் பொதுச் சுகாதாரம், குடிதண்ணீர் வசதி, ஆரம்பக் கல்வி முதலியவற்றைக் கவனித்து வருகிறது.

| | | |
|---|---|---|
| எப்பொழுதும் | நிலையங்கள் | ஒலிபரப்பி |
| கோட்டை | அகலமான | திரளான |
| துறைமுகம் | கலங்கரை விளக்கம் | விடுதிகள் |
| அரசாங்கம் | கடற்கரை | அரங்குகள் |
| காரியாலயம் | தூய்மையான | நிர்வாகம் |
| கலாசாலை | கவர்னர் | மந்திரிகள் |

### கேள்விகள்

1. நம் மாகாணத்தின் தலைநகரம் எது?

2. சென்னையில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல என்ன வசதிகள் உள்ளன?

3. சென்னை நகருக்குச் செல்வோர் தவறாமல் பார்க்கக்கூடியவை யாவை?

4. சென்னைக்கு அழகையும் சிறப்பையும் கொடுப்பது எது?

5. மாலை வேளைகளில் ஜனங்கள் ஏன் கடற்கரையில் கூடுகின்றனர்?

6. சென்னை நகரத்தின் பொது நிர்வாகத்தைக் கவனிப்பது எது?

## பயிற்சி

1. தென் இந்தியாவில் உள்ள முக்கியமான நகரங்களைப் பற்றித் தெரிந்துகொள்.

2. நம் நாட்டின் தலைநகரத்தைப் பற்றித் தெரிந்து கொள்.

3. காசி, காஞ்சி போன்ற புண்ணிய நகரங்களைப் பற்றித் தெரிந்துகொள்.

4. கோயம்புத்தூர் போன்ற தொழில் நகரங்களைப் பற்றித் தெரிந்துகொள்.

5. துறைமுகம், காரியாலயம், கலங்கரை விளக்கம், ஒலிபரப்பி, நிர்வாகம்—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

6. கீழ்வரும் வாக்கியங்களை வாசி :

| தன்மை | முன்னிலை |
|---|---|
| நான் வந்தேன். | நீ வந்தாய். |
| நாம் வந்தோம். | நீர் வந்தீர். |
| நாங்கள் வந்தோம். | நீங்கள் வந்தீர்கள். |

படர்க்கை

| | |
|---|---|
| அவன் வந்தான். | அது வந்தது. |
| அவள் வந்தாள். | அவை வந்தன. |
| அவர்கள் வந்தார்கள். | |

நான், நாம், நாங்கள் என்னும் சொற்கள் பேசுவோரைக் குறிக்கின்றன. இவை தன்மை ஆகும்.

நீ, நீர், நீங்கள் என்னும் சொற்கள் முன் நின்று கேட்போரைக் குறிக்கின்றன. இவை முன்னிலை ஆகும்.

அவன், அவள், அவர்கள், அது, அவை என்பன போன்ற சொற்கள் தன்மையையும் முன்னிலையையும் சேராதவை - பேசப்படும் வேறு பொருளைக் குறிப்பவை. இவை படர்க்கை ஆகும்.

தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் இம்மூன்றும் இடம் எனப்படும். எல்லாச்சொற்களும் இம்மூன்று இடங்களில் அடங்கும்.



# 20. பருத்திச் செடி

நாம் உணவு இல்லாமல் உயிர்வாழ முடியாது. அதுபோலவே உடை இல்லாமல் நாம் வெளியில் உலாவ முடியாது. உணவும் உடையும் நம் வாழ்க்கைக்கு அவசியமானவை. உடையில் கம்பளி உடை, பட்டு உடை, பருத்தி உடை எனப் பல வகைகள் உண்டு. நாம் வெப்பம் மிக்க நாட்டில் வாழ்கிறோம். ஆகவே பருத்தி உடையே நமக்கு முக்கிய உடையாகும். பருத்தி ஆடை பஞ்சிலிருந்து நெய்யப்படுகிறது. பஞ்சு பருத்திச் செடியிலிருந்து கிடைக்கிறது.

பருத்தி, செடிவகையைச் சேர்ந்த பயிர் ஆகும். அது புன்செய்ப் பயிர். ஆகவே அதற்குத் தண்ணீர் அதிகமாக வேண்டுவதில்லை. கரிசல் மண் பூமியே பருத்திப் பயிர் செய்வதற்கு ஏற்ற நிலமாகும். நமது நாட்டில் சென்னை மாகாணத்திலும், பம்பாய்

மாகாணத்தில் பல பகுதிகளிலும், பீஹார் மாகாணத்திலும், குஜரத்திலும் பருத்தி அதிகமாகப் பயிரிடப்படுகிறது. நமது சென்னை மாகாணத்தில் திருநெல்வேலி, இராமநாதபுரம், கடப்பை, கர்நூல், பல்லாரி, கோதாவரி, கிருஷ்ணா முதலிய ஜில்லாக்களில் பருத்தியை மிகுதியாகப் பயிரிடுகிறார்கள். ஆயினும் திருநெல்வேலி ஜில்லாவில் பயிராகும் பருத்தியே மிகச் சிறந்ததாகும்.

நம் நாட்டில் பயிராகும் பருத்தியில் இருவகைகள் உண்டு. ஒன்று ஐந்து மாதப் பயிர்; மற்றொன்று எட்டுமாதப் பயிர். கீழ்க்கரை நாடுகளில் ஐந்து மாதப் பருத்தியைப் பயிர் செய்கிறார்கள். மற்ற நாடுகளில் எட்டுமாதப் பருத்தி பயிர் செய்யப்படுகின்றது. ஐந்து மாதப் பருத்தியைப் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் நடுவார்கள். எட்டு மாதப் பருத்தி வைகாசி, ஆனி மாதங்களில் நடப்படும். இவ்வாறு இவற்றை நடுங்காலம் வேறுபட்டாலும் பறிக்கும் காலம் இரண்டிற்கும் ஒன்றாகவே இருக்கும். இருவகைப் பருத்திகளும் தை, மாசி மாதங்களிலேயே பறிக்கப்படும்.

பருத்தியை நடுவதற்குச் சில மாதங்கள் முன்பே நிலத்தை உழுது, எருவிட்டுப் பண்படுத்துவார்கள். பிறகு மழை பெய்ததும் பருத்தி விதையை இரண்டடிக்கு ஒன்றாக வரிசையாய் நடுவார்கள். விதை முளைத்ததும் இடையில் உள்ள நிலத்தை உழுதுவிடுவார்கள். சில இடங்களில் பருத்தியை நாற்று விட்டு நடுவதும் உண்டு. பருத்தி முளைக்கும் போதும், காய்க்கும் காலத்திலும் அதிக மழை கூடாது. செடி வளரும்போதும் மாதத்திற்கு ஒரு முறை இருமுறை மழை பெய்தால் போதும்.

பருத்தி நான்கடி உயரம்வரை வளரும். அது பக்கங்களில் கிளைகள் விட்டுப் புதர்போலப் படரும். பருத்தியின் இலை பல கூர்களாக இருக்கும். பருத்தி இரண்டு மூன்று மாதங்களில் மலரத் தொடங்கும். பருத்திப்பூ மஞ்சள் நிறம் உடையது. பூவின் அடியில் காய் தோன்றும். பருத்திக் காய் பசுமை நிறமாக இருக்கும். காயில் மூன்று அல்லது நான்கு அறைகள் இருக்கும். ஒவ்வோர் அறையிலும் பஞ்சும் விதைகளும் நிறைந்திருக்கும். காய்கள் முற்றி உலர்ந்ததும் வெடிக்கும். வெடித்த காயில் பருத்தி வெளிப்படும். பருத்தி வெண்மை நிறமாக இருக்கும். சிவப்பு நிறமான பருத்தியும் உண்டு. அது செம்பருத்தி எனப்படும்.

காய் முற்றி வெடித்ததும் அவற்றைப் பறித்துச் சேர்ப்பார்கள். பிறகு அவற்றின்மேல் மூடிக் கொண்டிருக்கும் தோலை எடுத்துச் சுத்தம் செய்வார்கள். பருத்தியின் நார் துசும்பு அல்லது சிம்பு எனப்படும்.

பருத்தியில் பலவகைகள் உண்டு. அவற்றுள் கம்போடியா என்பதும், கருங்கண்ணி என்பதும் சிறந்தவைகளாகும்.

| | | |
|---|---|---|
| உடை | பஞ்சு | ஜில்லா |
| வாழ்க்கை | கரிசல் மண் | தோல் |
| பருத்தி | மாகாணம் | துசும்பு |
| சிம்பு | வெப்பம் | கீழ்க்கரை நாடுகள் |

### கேள்விகள்

1. நமக்கு ஏற்பட்ட ஆடை எது? அது எதிலிருந்து நெய்யப்படுகிறது?
2. பருத்தி எப்படிப்பட்ட நிலத்தில் பயிராகும்?

3. நம் மாகாணத்தில் பருத்தி எங்கு மிகுதியாகப் பயிராகின்றது ?

4. நம் நாட்டில் பயிராகும் பருத்தி எத்தனை வகைப்படும் ? அவை எவை ?

5. பருத்திக்காயிலிருந்து பஞ்சு எவ்வாறு எடுக்கப் படுகிறது ?

6. பருத்தியில் சிறந்தவை எவை ?

## பயிற்சி

1. பருத்தியைப்போல நமக்கு உபயோகப்படும் வேறு மரம் செடிகளைப் பற்றித் தெரிந்துகொள்.

2. அவற்றைப் பயிர் செய்யும் முறைகளைத் தெரிந்து கொள்.

3. கீழுள்ள வாக்கியங்களை 'முடியாது' என்பதற்குப் பதிலாக 'முடியும்' என்பதை வைத்து மாற்றி வாசி:

(1) உணவு இல்லாமல் உயிர்வாழ முடியாது.

(2) உடை இல்லாமல் வெளியே உலாவ முடியாது.

4. தடித்த எழுத்தில் உள்ள சொற்களின் இடத்தைச் சொல் :

நான் எவ்வாறு வாழ்வேன் ?
நீ இங்கு வரலாகாது.
நாம் வாழ்கிறோம்.
நாங்கள் அறிவோம்.
நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் ?
அவர் கூறினர்.
அது கண்டது.
மக்கள் கூடுவர்.



# 21. நூற்றல்

முன் பாடத்தில் பருத்தி உண்டாகும் விதத்தைப்பற்றிப் படித்தோம். அந்தப் பருத்தியிலிருந்தே நூல் நூற்கப்படுகிறது. அந்நூலைக் கொண்டே ஆடைகள் நெய்யப்படுகின்றன. ஆகவே இந்தப் பாடத்தில் பருத்தியிலிருந்து நூல் எவ்வாறு நூற்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

காயிலிருந்து பிரித்தெடுத்த பருத்தியில் விதைகள் கலந்திருக்கும். அவ்விதைகளை நீக்கிய பிறகே அதை நூற்கமுடியும். பருத்தியிலிருந்து விதைகளை நீக்குவதற்கு ஒரு கருவி உண்டு. ஒரு மணையின் மேல் இரு கால்களை நிறுத்தி, அக்கால்களில் ஒன்றின்கீழ் ஒன்றாக இரு உருளைகள் கோக்கப்பட்டிருக்கும். அதன் வலப் பக்கத்தில் கைப்பிடி அமைந்திருக்கும். பருத்தியைச் சிறிது சிறிதாக இடக் கையால் எடுத்து, உருளைகளின் இடையில்

கொடுத்து, வலக்கையால் கைப்பிடியைச் சுழற்ற வேண்டும். உருளைகளின் இடையில் செல்லும் பருத்தியின் கொட்டைகள் பிரிந்து உள்பக்கம் விழும்; கொட்டை நீங்கிய பருத்தி வெளிப்பக்கம் விழும். கொட்டை நீங்கிய பருத்தி பஞ்சு எனப் படும்.

பஞ்சில் தோல், தூசு முதலியவை கலந்திருக் கும். அவற்றை ஒன்று விடாமல் நீக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். சுத்தம் செய்யப்பட்ட பஞ்சை உடைத்துப் பிரிக்க வேண்டும். அதற்கு வில்லும் விருடையும் வேண்டும். வில்லை அதன் நரம்பு பஞ் சின்மேல் பொருந்தும்படி இடக்கையில் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு வலக்கையில் விருடை யைப்பற்றி அதனுல் வில்லின் நரம்பை இழுத்து விடவேண்டும். நரம்பில் உண்டாகும் அதிர்ச்சி யால் பஞ்சு உடைபடும். அதில் உள்ள துசும்புகள் தனித் தனியாகப் பிரியும். இது பஞ்சு அடித்தல் என்றும், பஞ்சு கொட்டுதல் என்றும் சொல்லப் படும்.

உடைபட்ட பஞ்சைத் திரிகளாகத் திரிக்க வேண்டும். இது பட்டைபோடுதல் எனப்படும். பஞ்சைப் பலகையின்மேல் பரப்பி, அதன்மீது திரட்சியான குச்சி ஒன்றை வைத்து உருட்ட வேண்டும். பஞ்சு திரிந்த பிறகு குச்சியை மெல்ல இழுத்து எடுத்துவிட வேண்டும். இவ்வாறு திரிக் கப்பட்ட பஞ்சுச் சுருணைக்குப் பஞ்சுத் திரி என் பது பெயர். இதனைப் பஞ்சுப் பட்டை என்றும் கூறுவது உண்டு.

இவ்வாறு திரிக்கப்பட்ட பஞ்சுத்திரியிலிருந்தே நூல் நூற்கப்படுகிறது. தக்ளி, இராட்டை என்பன

நூற்பதற்கு உபயோகிக்கப்பட்டு வரும் கருவிகளாகும். இவற்றுள் தக்ளியே பழைமையானது. தக்ளிக்குக் கதிர் என்றும் ஒரு பெயர் உண்டு. தக்ளியில் நூற்பவர்கள் இடக்கையில் பஞ்சுத் திரியை இடுக்கிக் கொள்வர். அத்திரியின் அடியிலிருந்து சிறிது பஞ்சை இழுத்து, தக்ளியின் நுனியில் இணைத்து, வலக்கையால் தக்ளியைச் சுழற்றி விடுவர். தக்ளி சுழலும் போது, வலக்கையால் திரியிலிருந்து பஞ்சைச் சிறிது சிறிதாக இழுத்து விடுவர். தக்ளியின் சுழற்சியால் பஞ்சுகள் சுழன்று முறுக்கு ஏறும். முறுக்கேறிய நூலைத் தக்ளியின் அடியிலோ, நுனியிலோ சுற்றிக் கொள்வர். தக்ளியில் நூற்பவர் நின்று கொண்டே நூற்கவேண்டும். இக்கருவியால் அதிக நூல் நூற்க முடியாது.

இராட்டையில் நூற்போர் அமர்ந்து கொண்டே நூற்க வேண்டும். இராட்டையின் ஒரு பக்கத்தில் பெரிய சக்கரம் இருக்கும். மற்ெருரு பக்கத்தில் கதிர் கோக்கப்பட்டிருக்கும். சக்கரமும் கதிரும் கயிற்றுல் இணைக்கப்பட்டிருக்கும். சக்கரத்தில் கைப்பிடி அமைக்கப்பட்டிருக்கும். நூற்பவர் இடக்கை விரல்களுக்கு இடையில் பஞ்சுத் திரியை இடுக்கிக்கொண்டு, அதனைக் கதிர் நுனியோடு இணைத்துக் கொள்வர்; பிறகு வலக்கையால் சக்கரத்தின் கைப்பிடியைப் பற்றிச் சுழற்றுவர். சக்கரம் சுற்றிக் கதிரைச் சுற்றச் செய்யும். கதிரின் சுழற்சியால் பஞ்சும் சுழன்று முறுக்கு ஏறும். முறுக்கேறிய நூலை அக்கதிரிலேயே சுற்றிக் கொள்வர். பிறகு அந்நூலை எடுத்துக் குஞ்சங்களாகச் சுற்றிச் சிட்டங்களாகக் கட்டுவர்.

இவ்வாறு நூற்கப்பட்ட நூல் கைத்தறியில்

ஆடையாக நெய்யப்படும். நம் நாட்டில் நெடுங்கால மாக நூற்றலும் நெசவும் இவ்வாறே நடந்து வந் தன. பிற்காலத்தில் இயந்திரங்கள் தோன்றியதும் இவை மறைந்தன. பருத்தியைக் கொட்டை நீக்கு வது முதல் ஆடை நெய்வது வரையில் எல்லாம் இயந்திரங்களாலேயே நடைபெறலாயின. இதனால் அத்தொழில்களைச் செய்து வந்த மக்கள் தொழிலை இழந்தனர். அவர்கள் பிழைப்புக்கு வழியில்லாமல் போயிற்று. நாட்டில் ஏழைமையும் துன்பமும் இடம் பெற்றன.

காந்தியடிகள் இவ்வுண்மையை உணர்ந்தார். மறைந்து போன இராட்டையைத் தேடிக் கொடுத் தார்; ஒவ்வொருவரும் இராட்டையில் நூற்கவேண் டும் என்றும், அந்நூலைக் கொண்டு கைத்தறியில் நெய்த கதர் ஆடையையே உடுக்க வேண்டும் என் றும் கூறினார். அவர் இத்தொழில்களைப் பாடசாலை களிலேயே பாடமாக வைத்துச் சிறுவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்று விரும்பினார். அவர் இந்த நோக்கத்தோடேயே தாம் வகுத்த கல்வித் திட்டத்தில் நூற்றல் தொழிலையும், நெய்தல் தொழிலையும் அடிப்படைத் தொழில்களாகச் சேர்த் துள்ளார். நாம் இத் தொழில்களைக் கற்று நாட்டின் ஏழைமையைப் போக்க வேண்டும்; காந்தியடி களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஆடைகள் | திரி | கைத்தறி |
| காந்தியடிகள் | உருளைகள் | சுருணை |
| நெசவு | கதர் ஆடை | கைப்பிடி |
| பட்டை | நூற்றல் | விருப்பம் |
| வில் | தக்ளி | இயந்திரங்கள் |

| | | |
|---|---|---|
| பூர்த்தி | விருடை | இராட்டை |
| பிழைப்பு | நரம்பு | கதிர் |
| ஏழைமை | அதிர்ச்சி | குஞ்சம் |
| துன்பம் | அடித்தல் | சிட்டம் |
| கொட்டுதல் | பிழைப்பு | அடிப்படைத் தொழில் |

## கேள்விகள்

1. பருத்தியிலிருந்து கொட்டைகளை எவ்வாறு நீக்குவர் ?
2. பஞ்சு கொட்டுதல் என்றால் என்ன ?
3. நூற்பதற்கு உபயோகப்படும் கருவிகள் யாவை? அவற்றுள் பழைமையானது எது ?
4. நம் நாட்டில் ஏழைமையும், துன்பமும் இடம் பெறக் காரணம் என்ன ?
5. இதனைப் போக்கக் காந்தியடிகள் என்ன செய்தார் ?

## பயிற்சி

1. தக்ளி, இராட்டை இவைகளில் நூற்பதைப்பார்.
2. நீ அவற்றில் நூல் நூற்கப் பழகிக்கொள்.
3. நான் கேட்டேன்—இவ்வாறே கீழே கோடிட்ட இடங்களில் 'கேள்' என்னும் சொல்லைப் பொருத்தமாக மாற்றி அமைத்து வாசி :

நான் கேட்டேன்.

| | | | |
|---|---|---|---|
| நாம் | ——— | அவன் | ——— |
| நாங்கள் | ——— | அவள் | ——— |
| நீ | ——— | அவர்கள் | ——— |
| நீர் | ——— | அது | ——— |
| நீங்கள் | ——— | அவை | ——— |

4. நிகழ்கால வினைச் சொற்களை இறந்தகால வினைச் சொற்களாக மாற்றி வாசி :

நாம் வாழ்கிறோம்.
வண்டிகள் இருக்கின்றன.
குரங்கு தாவுகிறது.
பயிர் நிமிர்ந்து நிற்கிறது.



# 22. புலிக் கூடு

பந்தம் எரியு தோடி !—கண்களைப்
பார்க்க நடுங்குதடி !
குந்தம்வாள் ஈட்டியெல்லாம்—கூடவே
கொண்டு திரியுதடி !
வாயைப் பிளக்குதடி !—கையுறை
வாளும் உருவுதடி !
பேயைப் படைத்த பின்னே—இதனையும்
பிரமன் படைத்தானடி ?
வாலை முறுக்குது பார்—வால் நுனி
வட்டம் சுழலுது பார்.
சாலப் பதுங்குது பார்—நம்மீது
சாடவும் நோக்குது பார்.
இடித்து முழங்குதடி—தொண்டையும்
இரும்பாலே செய்ததோடி ?
அடுத்து நெருங்காதேடி—அது மிக
ஆங்காரம் கொள்ளுதடி.

கூட்டில் அடைத்திடினும்—இரையினைக்
கொண்டு கொடுத்திடினும்
காட்டில் வளர்ந்த குணம்—புலிகளும்
காட்டா திருக்குமோடி ?

—தேசிக விநாயகம் பிள்ளை

### பயிற்சி

1. இப் பாட்டுகளை இசையோடு படி.
2. இவற்றை மனப்பாடம் செய்துகொள்.
3. இதன் ஆசிரியரைப் பற்றித் தெரிந்துகொள்.
4. கோடிட்ட இடங்களில் எதிரில் தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி அமைத்து வாசி :

(1) —— நான்கடி உயரம் வளரும். (பருத்தி)
(2) —— உழுது பண்படுத்துவார்கள். (நிலம்)
(3) —— ஆடை நெய்வார்கள். (நூல்)
(4) கழுகு —— இடம் கொடுத்தது. (பூனை)
(5) கரிகாலனை —— வெளியேற்றினர். (மனை)
(6) —— ஆட்சி (கரிகாலன்)
(7) —— பறவைகள் வாழ்ந்தன. (மரம்)

5. சாலப் பதுங்குது — இதில் சால என்பது பதுங்குது என்னும் வினையின் குணத்தை உணர்த்துகிறது. இது உரிச்சொல் எனப்படும். இவ்வாறு ஒரு பெயர் அல்லது வினையின் குணத்தை உணர்த்தி வரும் சொற்கள் உரிச் சொற்கள் ஆகும்.

மற்றொன்று — இதில் மற்று என்பது வேறு என்னும் பொருள் தருகிறது. இச்சொல் தனித்து வந்து பொருள் உணர்த்தாது. ஒரு பெயர் அல்லது வினைச் சொற்களின் இடையில் அவற்றைச் சார்ந்தே வரும். இவ்வாறு வரும் சொல் இடைச் சொல் எனப்படும்.



# 23. நாச்சியப்பர்

உலகத்தில் மனிதனாகப் பிறந்தால் புகழோடு பிறக்க வேண்டும். புகழ்பெற வாழ்வதே மனிதப் பிறவியின் நோக்கமாகும். தன் நலத்தை மறந்து பொது நலத்திற்காக உழைப்பவர்களே அதனை அடைய முடியும். அவ்வாறு பொதுநலப் பணியால் புகழ்பெற்ற பெருமக்கள் பலர் நம் தமிழ் நாட்டில் தோன்றியுள்ளனர். அவர்களுள் சேலம் நாச்சியப்ப கவுண்டரும் ஒருவராவர்.

நாச்சியப்பர் சேலம் ஜில்லாவில் உள்ள கொங்கணபுரம் என்னும் சிற்றூரில் 1904-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி பிறந்தார். அவரது தந்தையார் அர்த்தநாரி கவுண்டர். தாயார் நல்லம்மாள். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றபடி நாச்சியப்பர் சிறுவயதிலிருந்தே மிக்க சுறுசுறுப்பும், நற்குணமும் உடையவராய் இருந்தார்.

நாச்சியப்பர் சிறு பிள்ளையாக இருக்கும் பொழுதே அவரது தந்தை இறந்துவிட்டார். ஆயினும் அவரது தாய் அவருக்குத் தந்தையை இழந்ததால் ஏற்படக்கூடிய துன்பங்கள் தோன்றாதவாறு காப்பாற்றினார்; அவருக்குக் கல்லூரிப் படிப்பு வரையில் கற்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். நாச்சியப்பர் முதலில் தமது ஆரம்பக் கல்வியைத் தங்கள் கிராமத்துப் பாடசாலையிலேயே ஆரம்பித்தார். பின்பு அவர் நாமக்கல்லில் உள்ள உயர்நிலைப் பள்ளியிலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் சேர்ந்து கற்கலானார்.

நாச்சியப்பர்பால் மாணவர்களுக்கு இருக்க வேண்டிய நற்குணங்கள் யாவும் நிறைந்திருந்தன. அவரிடம் சிறந்து விளங்கிய எடுத்த செயலைத் தொடர்ந்து முடிக்கும் குணம் அவருக்கு மாணவராய் இருந்த காலத்திலிருந்தே ஏற்பட்டது. அவர் தளராத மனமும், குறையாத ஊக்கமும் படைத்திருந்ததால் தாம் கற்கவேண்டியவற்றைச் சிறப்புறக் கற்றார்.

நாச்சியப்பர் பொதுநலப் பணியில் ஆர்வம் மிக்கவர். இதனை அறிந்த மக்கள் அவரை அவரது கல்வி முடிவதற்கு முன்பே பொதுநலப் பணியில்

ஈடுபடுமாறு செய்தனர். அதன் பயனாக அவர் தமது தாலூக்கா போர்டின் அங்கத்தினராக ஆனார். அதுவே அவர் முதன்முதலாகப் பொது நலப் பணியில் ஈடுபடத் தொடங்கியதாகும்.

தாலூக்கா போர்டில் பணியாற்றத் தொடங்கிய நாச்சியப்பர் சென்னைச் சட்டசபையின் அங்கத்தினராகப் பணியாற்றவும் தொடங்கினார்.

நாச்சியப்பருக்குக் கல்வியில் மிகுந்த விருப்பம் உண்டு. ஆகவே அவர் சேலம் ஜில்லா போர்டின் தலைவராய் இருந்தபொழுது அந்த ஜில்லாவில் பல பள்ளிகளை ஏற்படுத்தினார். அதனால் சேலம் ஜில்லா கல்வியில் சிறந்த ஜில்லா எனப் பெயர் பெற்றது.

நாச்சியப்பரது தன்னலமற்ற பணியையும், நேர்மையையும் கண்ட அந்த ஜில்லா மக்கள் அவரைப் பல வேறு பொதுப் பணிகளில் ஈடுபடச் செய்தனர். அவர் சட்டசபை, மதுவிலக்குக் குழு, கூட்டுறவுச் சங்கம், சாரணர் இயக்கம் முதலியவற்றில் கலந்துகொண்டு ஆற்றிய செயல்கள் அளவிலடங்கா. அவர் தம் தாய் நாட்டின் விடுதலைப் போரிலும் கலந்துகொண்டு சேவை செய்தார். அதன் பயனாக அவர் பலமுறை சிறைவாசமும் அடைந்தார். சிறையிலும் அவர் பல சிறந்த சீர்திருத்தங்களைச் செய்தார்.

தலைவர் நாச்சியப்பர் பொதுநலத் தொண்டாற்றவே பிறந்தவராதலால் அல்லும் பகலும் ஓய்வு சிறிதுமின்றி உழைத்து வந்தார். அதன் பயனாக அவரது உடல் நலிவுற்றது. அவர் நோய் உற்று வருந்தும் காலத்திலும் ஊழியம் செய்வதை நிறுத்தவில்லை; முடிந்த வரையில் தொண்டாற்றி வந்தார்.

கடைசியாக அவர் 1951-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ஆம் தேதி வைத்தியரிடம் விடைபெற்று ஊர் சென்ருர். ஊர் சென்றவர் சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அன்றிரவே சென்னைக்குப் பயணமாஞர்.

சென்னை சென்ற நாச்சியப்பர் சட்டசபையில் முதல் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆனல் அவரால் மறுநாள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. தன்னலம் சிறிதும் இன்றிப் பிறர் நலத்துக்காகவே அல்லும் பகலும் ஓயாது உழைத்து வந்த அப்பெரியார் அரசாங்க விடுதியிலேயே உயிர் நீத்தார்.

தலைவர் நாச்சியப்பர்பால் விளங்கிய நற்குணங்கள் பல. அவருக்கு அவரது அன்னையாரிடம் மிக்க அன்பும் பக்தியும் உண்டு. அவர் ஒழுக்கத்தில் சிறந்தவர்; குறையைக் களைந்து நிறைவை நிலை நிறுத்துபவர்; குற்றம் போக்கிக் குணத்தைக் கொள்ளுபவர். அவர் எண்ணியதை எண்ணியபடியே செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர். செய்வன திருந்தச் செய் என்னும் குணம் அவர் பால் சிறந்து விளங்கியது. அவர் ஒரு வேலையில் ஈடுபட்டாராஞல் எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் அவைகளைப் பொருட்படுத்தாது தாம் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்கும் கலங்காத நெஞ்சம் படைத்தவர். நாச்சியப்பர் வெள்ளை மனம் படைத்தவர். அவர் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதை அறியாதவர். அவர் தம்மைப் பொதுநலப் பணிக்கே ஆளாக்கிக் கொண்டவர்.

இத்தகைய அரும் பெரும் குணங்களைப்

படைத்த நாச்சியப்பரது வாழ்க்கை வரலாறு வருங் காலத்துத் தலைவர்களாய் விளங்கப்போகும் சிறுவர் களுக்கு ஒரு உதாரணமாக விளங்கும். தமக்கென வாழாது பிறருக்காகவே வாழ்ந்த இப்பெரியாரது பேரும் புகழும் என்றும் நிலைத்திருக்க வேண்டும். அதற்குச் சிறுவர்கள் அவரது குணங்களை அறிந்து அவற்றை மேற்கொண்டு ஒழுகுவதே சிறந்த வழி யாகும்.

| | | |
|---|---|---|
| நோக்கம் | தோன்றுதவாறு | தொடங்கி |
| அல்லும் பகலும் | தன்னலம் | ஏற்பாடு |
| அங்கத்தினர் | ஊழியம் | பொது நலம் |
| நற்குணம் | முயற்சி | ஆற்றல் |
| பணி | தளராத | குழு |
| இடையூறு | தோன்றி | சிறப்புற |
| சங்கம் | கலங்காத | சுறுசுறுப்பு |
| ஈடுபாடு | சிறைவாசம் | ஆளாக்கி |

### கேள்விகள்

1. நாச்சியப்பரது பெற்றோர் யாவர்?
2. நாச்சியப்பரிடம் விளங்கிய நற்குணங்கள் யாவை?
3. அவர் செய்த பொதுநலத் தொண்டுகள் யாவை?
4. நாச்சியப்பருக்குக் கல்வியில் ஆர்வம் உண்டு என்பது எவ்வாறு விளங்குகிறது?
5. அவரது பெயர் நிலைத்திருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

### பயிற்சி

1. நாச்சியப்பர் போன்ற பொதுநலத் தொண்டர் களைப்பற்றித் தெரிந்துகொள்.
2. உனக்குத் தெரிந்த வேறொரு பொதுநலத் தொண்டரைப் பற்றிச் சொல்.
3. பொதுநலம், ஏற்பாடு, தளராத, அல்லும் பக லும், இடையூறு, கலங்காத—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.
4. ஊழியம்—இதற்கு வேறு ஒரு சொல் கூறு.



## 24. தினசரிக் கடமைகள்

காலை எழுந்திருக்க வேண்டும்—அன்பாய்க்
கடவுள் அடி பரவ வேண்டும் ;
பால்லெனப் பல்துலக்க வேண்டும்—புதுப்
பாடம் பலபடிக்க வேண்டும்.

ஆடைகளைத் துவைத்துக் கொண்டு—அழுக்கு
அகலத் தலைமுழுக வேண்டும் ;
நாடி உரியகுறி நன்றாய்—நெற்றி
நலம்பெற வேதரிக்க வேண்டும்.

ஆத்திரம் இன்றிமெது வாக—உணவை
அளவாய் அறிந்துண்ண வேண்டும் ;
நேர்த்தியாய் உடுத்துக் கொண்டு—குறித்த
நேரத்தில் பள்ளிசெல்ல வேண்டும்.

குருவை வணங்கிநிற்க வேண்டும்—அவர்
குறிப்பின் வழிநடக்க வேண்டும்;
மருவி அமைதியாய் இடத்தில்—இருந்து
வணங்கிப் பாடம்கேட்க வேண்டும்.

தீய பிள்ளைகளுடன் கூட—என்றும்
சேர லாகாதுதீமை சேரும்;
தூய மனத்துடனே மாலை—வேளையில்
துள்ளி யாடினால்நலம் சாரும்.

கண்ணுக் கிருட்டுவதன் முன்னே—நீ
கடுகி வீடடைய வேண்டும்;
பண்ணுக் கினியதுதி பாடி—கடவுளைப்
பக்தி யுடன்பரவ வேண்டும்.

உண்டு ஓய்வுசிறிது கொண்டு—பின்பு
உரிய பாடம்படிக்க வேண்டும்;
தொண்டை கிழியப்படிக் காதே—வாய்விட்டுத்
தோன்று மலும்முணுக் காதே.

அதிக நேரம்விழிக் காதே—நன்கு
அமையா இடத்தில்படுக் காதே—தெய்வத்
துதிகள் பாடிப்படுத் துறங்கு—பல
சுகங்களும் சாருமுனை ஒருங்கு.

—ம. வி. இராகவன்

# 25. தாய் நாடு

இந்திய நாடிது உன்னுடை நாடு
    என்று தினம்தினம் நீ இதைப் பாடு
முந்தி பரதன் புரந்தமுன் னாடு
    முன்னிய பாரதவீரர்தம் நாடு.

வீரன் இராமன் விளங்கிய நாடு
    விண்ணவர் யாவரும் விரும்புநன் னாடு
வீரப் பெண்கள்பலர் தோன்றிய நாடு
    வேதமும் கீதமும் நிறைந்ததொன் னாடு.

மலையும் கடலும் வளைந்திடும் கோட்டை
    மாநதி கள்பல பாய்ந்தோடும் பாட்டை
கலையும் பொருளும் கலந்ததிந் நாட்டை
    கடவுளர் சொந்தமாய்க் கொண்டாரிவ் வீட்டை.

மோனமும் ஞானமும் முற்றின திங்கே
    முன்னின யாவும் முடிவதும் இங்கே
தானமும் தவமும் பிறந்தன இங்கே
    தருமம் சிறந்து தவழ்ந்ததும் இங்கே.

பாரத நாடிது பழம் பெரு நாடு
    பாட்டனின் நாடு பரம்பரை நாடு
பாரித னில்சொல்ல வேறில்லை ஈடு
    பக்தி யுடனிதன் மேன்மையை நாடு.

—ம. வி. இராகவன்

# 26. நறுந் தொகை

## (இறைவன்)

எழுத்தறி வித்தவன் இறைவனாகும்

## (அழகு)

கல்விக் கழகு கசடற மொழிதல்
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்
மன்னர்க் கழகு செங்கோல் முறைமை
உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்
மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்
குலமகட் கழகு கொழுநனைப் பேணுதல்
அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்
வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை

## (பெரியோரும் சிறியோரும்)

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
அதனால்
பெரியோ ரெல்லாம் பெரியரும் அல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்
உற்றோ ரெல்லாம் உறவினர் அல்ல+.

(குணம் கெடாமை)

அடினும் ஆவின் பால் தன் சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண் கடல் சேறா காது.

(பெரியோர் சிறியோர் கேண்மை)

ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.
நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்கொள் ளாதே.
பெருமையும் சிறுமையும் தாம்தர வருமே.
சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

(கல்வி)

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதராகும்மே.
நாற்பால் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல் வருகென்பர்..

—அதிவீரராம பாண்டியன்